ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧	விக்ருதி ௵ பங்குனி ௴	பகுதி ௩

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

(வங்காளத்தினின்றும் மொழிபெயர்த்தது)

ராம கிருஷ்ண நாமீ ஜெய ஜெய
பிரம்ம ஸ்நாதனப் பெரும ஜெய ஜெய
நரஉடல் தரித்த நாதா ஜெய ஜெய
பதித பாவன வதிதுயர் எரிப்போய்
பிரம்மா விஷ்ணு பிஞ்ஞகன் நீயே
நிரஞ்சனன் நீயே நீணில மக்கள்
கனஇருட் காமகாஞ் சனத்தமிழ் காலை
இளங்கதி ரோனெனக் கிளம்பினை நீயே
உருவங் குதிராம் ஒண்மனைக் கொண்டனை
சருவ தரும சமன்வயம் அருளினை
எத்தனை மனிதர் அத்தனை மதமெனக்
காட்டினை வாழ்வால் நாட்டினை உண்மையை
சமயச் சண்டையைத் தவிர்த்தனை தக்கதோர்
அமயம் புதிதாய் அமைத்தனை சங்கம்.

[பதித பாவன—நெறிதவறியவரைச் சுத்தப் படுத்துபவர். வதி துயர்-தங்கும் (மூன்று) தாபங்கள். பிஞ்ஞகன்—சிவன். சமன்வயம்—சமரசம்.]

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

உரிமை

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகையால், அறத்தையும்விட மிகவும் நாம் கருத்திற் கொண்ட நோக்கமாகிய மதத்தைப்பற்றிப் பேசுவோமாயின், எல்லா வேறுபாடுகளும் நீங்கி, ஒரே தன்மைய தாகும். சாவு நிலை உண்டாதல் உயிருள்ள வரை நடைபெற இயலாது. அத்தகைய நிலை விரும்பத் தக்கதுமன்று. அதே சமயம் இந்த ஒற்றுமை (ஏகத்வம்) முன்னரே உள்ளது என்ற மற்றெரு பக்கத்து உண்மையும் கருதத் தக்கது. இதுதான் சிறப்பாக ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது; அது யாதெனில், இந்த ஒற்றுமை புதிதாக உண்டாக்கப்பட வேண்டியதன்று, அது முன்னரே உள்ளது, அது இல்லாதபோது வேற்றுமை புலப்படாதொழியும் என்பதே. கடவுளை நாம் உண்டாக்க வேண்டியதில்லை. அவர் முன்னமே இருப்பவர். எல்லா மதங்களும் இதை ஒப்புக் கொள்ளுதற்குரிய ஒரு கொள்கையாகக் கருதுகின்றன. எல்லைக்குட்பட்ட பொருளை ஒருவன் காணும்போதெல்லாம், அவன் எல்லைக்கு அப்பாற் பட்டதையும் கண்டவனாகிருன். சிலர் எல்லையுற்ற பொருளை வற்புறுத்தினர்; புறத்தேயுள்ள எல்லையற்ற பொருளைக் கண்டதாகக் கூறினர்; பிறர் எல்லையற்ற பொருளை வற்புறுத்தினர், எல்லையுற்ற பொருளைக் கண்டதாகக் கூறினர். ஆனல், ஒன்றைக் காணுது மற்றென்றைக் காண இயலாது என்பது தருக்க முறைப்படி அவசியமான உண்மை என்பதையும் யாம் அறிவோம். ஆதலின் யாம் வற்புறுத்தும் உண்மை யாவது, இந்த ஒரே தன்மை, இந்த ஒற்றுமை, இந்தப் பூரணத் தன்மை (என்று கூறலாமன்றே ?) ஆக்கப்பட வேண்டியதன்று, அது முன்னரே உள்ளது, இங்கேயே உள்ளது. நாம் அதை உணரவேண்டுவதொன்றே, அறியவேண்டுவதொன்றே. நாம் அதை அறியினும் அறியாவிடினும், அதைத் தெளிவாகக் கூற இயலுமெனினும் இயலாதெனினும், இக்காட்சி புலக் காட்சிக்குரிய சக்தியையும் தெளிவையும் பெற்றாலும் பெருவிடினும், அது அங்கேயுள்ள தொன்றேயாம். நமது மனங்கள் தருக்க முறைக்குட் படும் கட்டாயத்தால், அது அங்கே உள்ளதென்றும், இல்லாவிடில் எல்லையுற்ற பொருட் காட்சி நிகழாதென்றும் ஒப்புக் கொள்ள வேண்டியவராகிறோம். பொருளும் அதன் பண்புகளும் எனும் பழங் கொள்கையைப் பற்றி யான் பேசவில்லை, ஒற்றுமையைப் பற்றித் தான் பேச்சு. பல நிகழ்ச்சிகளின் தொகுதிகட்கு மத்தியிலும், நான் வேறு, நீ வேறு என்ற உணர்வின் உண்மையே, அதே சமயம் நானும் நீயும் வேறல்ல என்ற உணர்ச்சியை நமக்குக் கொணர்ந்தளிக்கின்றது. அந்த ஒற்றுமையின்றி அறிவு உண்டாதல் இயலாது. ஒற்றுமைக் கருத்தின்றி, காட்சியோ அறிவோ ஏற்பட ஒண்ணுது. ஆதலின் இரண்டும் ஒன்றுக்கொன்று பக்கத்திலே அமர்ந்துள்ளன.

ஆதலால், நிலைமைகள் யாவும் முற்றிலும் ஒரு படித்தாயமைதல், அறத்தின் நோக்கம் அதுவாயின், நிகழவொண்ணுததாகத் தோன்றுகிறது. எல்லா மனிதர்களும் ஒரேவிதமாயிருத்தல் வேண்டும் என்பது, நாம் எவ்வளவு முயன்றாலும், ஒருக்காலும் நிகழவொண்ணுத தாகும். வேறுபட்டவர்களாகவே மனிதர் பிறப்பர்; சிலர்க்குப் பிறரினும் அதிக சக்தி அமைந்திருக்கும்; சிலர்க்கு இயல்பாகவே திறமைகள் ஏற்பட்டிருக்கும், பிறர்க்கு இராது; சிலர்க்குப் பூரணமான உடல்கள் வாய்ந்திருக்கும், பிறர்க்கு இரா; இதை நம்மால் ஒருக்காலும் தடுக்க முடியாது. அதே சமயம் பற்பல குரவர்களாலும் பறையறையப்பட்ட பின்வரும் ஆச்சரியமான அறமொழிகள் நமது காதிலே ஒலித்துக் கொண்டேயுள்ளன:— ''இவ்வாருக, அனைவரிடத்தும் சமமாக ஒரே ஈசன் வீற்றிருப்பதைக் காணும் இருடி தன்னைத்தானே துன்புறுத்தமாட்டான், அவ்வழியே உயர்வுற உயர்ந்த குறிக்கோளை (இலக்ஷியத்தை) அடைகிருன். ''ஈசன் தூயோன், அனைவர்க்கும் சமமாயுள்ளான்; ஆதலின் எவரெவருடைய உள்ளங்கள் இந்த ஒரே தன்மையில் உறுதியாக நிலை நாட்டப்படுமோ, அவரவர் பிறவியை வென்றவராவார். ஆதலால் அத்தகையார் ஈசனிடம் வாழ்வதாகக் கூறப்படுகின்றனர்.'' இது உண்மையான கருத்து என்பதை நம்மால் மறுக்க இயலாது; ஆயினும் அதே சமயம் இக்கஷ்டமும் வந்து சேர்கின்றது— புற வடிவங்களும் இடமும் பற்றியவரை ஒரே தன்மையதாதல் ஒரு நாளும் அடையக் கூடியதன்று.

ஆனாலும் அடையக் கூடியது யாதெனில், உரிமையை இல்லாதொழித்தலே. உலகமெங்கும் முன் நிற்கும் வேலை உண்மையாக

இதுவே. ஸமூக வாழ்வுகள் எல்லாவற்றுள்ளும், ஒவ்வொரு மனித இனத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் இவ்வொரே சண்டை இருந்து வந்துள்ளது. ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரைவிட இயல்பாகவே அதிக அறிவாற்றல் படைத்துள்ளதைப் பற்றிச் சங்கடம் இல்லை. ஆனால் அறிவாற்றலின் நலனைப் பெற்றிருப்பதனால் இக் கூட்டத்தார் அந்நலனைப் பெற்றிராதவரிடத்தினின்றும் உடலின்பத்தையும் பறித்துவிட வேண்டுமா என்பது பற்றியே சங்கடம். சிலர் மற்றோரை விட மிக்க உடல் வலிமை பெற்றிருப்பார் என்பதும், அதனால் மெலிந்தவரை அடக்கியாளவும் தோற்கடிக்கவும் இயல்பாகவே திறமை வாய்ந்திருப்பார் என்பதும் தானே விளங்கும் உண்மைகளே; ஆனால் இவ் வலிமை காரணமாக இவ்வாழ்விற்குரியதும் எய்தற்குரியதுமான எல்லா இன்பத்தையும் தாமே தொகுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பது சட்டத்திற்கு ஏற்றதன்று; இதை எதிர்த்தே போர் தொடுக்கப்பட்டுள்ளது. சில மக்கள் தம்மிடம் இயல்பாய் அமைந்துள்ள சக்தியால் மற்றவரினும் மிக்க செல்வத்தை ஈட்டும் திறன் வாய்ந்திருத்தல் இயல்பேயாம்; ஆனால் பொருளை ஈட்டும் இத் திறமை காரணமாக அன்னார் கொடுங்கோல் செலுத்துவதும், தமதளவு பொருளீட்ட இயலாதாதரைக் காலடிக் கீழ்ச் சமட்ட வேண்டும் என்பதும் சட்டப்பகுதியாகா; இதனை எதிர்த்தே போர் தொடுக்கப்பட்டுள்ளது. இன்னொருவனைவிட அதிக நலனை அனுபவித்தலே உரிமையெனப்படுவது; காலமெல்லாம் ஒழுக்கத்திற்குக் குறி அதனை அழிப்பதேயாகும். இவ்வேலையே வேற்றுமையை அழியாது ஒற்றுமையை நோக்கியும் ஏகத்வத்தை நோக்கியும் செலுத்துவதாகும்.

இவ்வேறுபாடுகள் யாவும் காலமுள்ளளவும் இருக்கட்டும்; அது வாழ்க்கையின் ஸாரமேயாகும். காலமுள்ளளவும் நாம் எல்லோரும் இவ்வாறே விளையாடுவோம். நீ செல்வவானாக, யான் வறிஞனாயிருப்பேன்; நீ பலமுள்ளவனாவாய், யான் பலவீனவனாவேன்; நீ கற்றவனாயிருப்பாய், நான் கல்லாதவனாயிருப்பேன்: நீ மிக்க பாரமார்த்திக ஞானம் பெற்றிருப்பாய், நான் அதிற் குறைந்தவனாயிருப்பேன். ஆனால் அதற்கென்ன? நாம் அவ்வாறே இருப்போம்; ஆனால் உனது உடலோ அறிவோ அதிக பலமுள்ளதாய் இருக்கும் காரணத்தால், உனக்கு என்னைவிட அதிக உரிமை இருத்தல் தகாது; உன்னிடம் அதிகச் செல்வம் இருப்பது, நீ என்னினும் பெரியோனாக மதிக்கப்படவேண்டும் என்பதற்குக் காரணமாகாது; ஏனெனில், நிலைமைகள் வேறுபட்டிருப்பினும் அந்த ஒரே தன்மை இங்கும் உள்ளதேயாகும்.

அறநூல் இதுவரை வேற்றுமையை அழிக்கும் தொழிலில் இறங்கியதில்லை, புற உலகத்தே ஒரே தன்மையை நிலை நாட்டுவதும் அதன் தொழிலாயிருக்கவில்லை. இனியும் அவ்வாறிராது; ஏனெனில் அது நிகழமுடியாத ஒன்றாகும், அது மரணத்தையும் நாசத்தையும் தருவதாகும். பின் அதன் தொழில் யாதெனில், இத்தனை வேறுபாடுகள் அனைத்திற்கும் மத்தியிலும், ஒற்றுமையை உணர்தலும், நம்மைப் பயமுறுத்தும் அனைத்தும் இருக்கும் போதும் உள்ளே எழுந்தருளியிருக்கும் இறைவனை உணர்தலும், வெளிப்படையான பலவீனமெல்லாம் இருப்பினும் அந்த எல்லையுற்ற வலிமையே ஒவ்வொருவரது பண்பும் என்பதை அறிதலும், மேற் புறத்தே தோன்றும் அனைத்திற்கும் மாறாக ஆன்மாவின் சாஸ்வதமான எல்லையற்ற அகண்ட ஸாரமான தூய்மையை ஒப்புக்கொள்ளுதலும்—இதுவேயாம். இதை நாம் உணர வேண்டியிருக்கின்றது. ஒரு கட்சியை மட்டும் பேசுதல், ஒரு நிலையில் ஒரு பாதியை மட்டும் கொள்ளுதல் ஆபத்திற்கிடமாகும், சண்டையை விளைப்பதுமாகும். முழுவதையும் உள்ளவாறே நாம் எடுத்துக் கொண்டு, அதை நமக்கு ஆதாரமாகக் கொண்டு நின்று, தனிவாழ்க்கையிலும் ஸமூகத்தின் அங்கத்தினரான நிலையிலும், நமது வாழ்க்கைகளின் ஒவ்வொரு பகுதியிலும் அதைச் செயல் முறைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

—ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர்.

கல்வியும் விநயமும் நன்குகற்ற பிராமணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலையனிடத்தும், பண்டிதர் ஸமப்பார்வை யுடையோர்

— பகவத் கீதை

குருதேவர் உபதேச மணிமாலை

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

769—மூவகைப் பக்தி

முக்குணத் தொடர்பால் முன்னிடும் பத்தி
மூவகைத்தாய் நிகழ்ந்திடுமால்,
எக்குணச் செருக்கும் பெருமித நடப்பு
மில்லதுமுதற்குண நெறித்தாம்,
ஒக்குமெய்ம் மதத்தின் குறிமணிபொற்பூண்
உயருடை யணிபெரு மிதமே
மிக்குற விடையே விளங்கிடுங் குணத்தில்
மேவிடும், கடையது மூர்க்கம். 149

(பெருமிதம்-அகங்காரம். இடையேகுணத்தில்-ரஜோ குணத்தில். கடையது-தமோ குணம்.)

771—சாதனங்களின் படிகள்

நல்லவர் கூட்டம், நாடிடுஞ் சிரத்தை,
நலிவறு நிட்டை, மெய்ப் பாவம்,
ஒல்லுறு மேன்மை யொளிர்மகா பாவம்
உரைத்தவற் ருறுயிர் தூய்தாம்,
எல்லையி னிடையூ றற்றமெய்த் தியானம்
இயம்பிடும் பாவமா மென்க,
சொல்லிடு மதன்றன் முதிர்ச்சிமா பாவம்,
தோய்ந்தவர் பித்தரே போல்வார். 150

(நலிவு-துன்பம். பாவம்-ஈசுவர சிந்தனையால் வரும் மௌன நிலை.)

773—வைதி பக்தியும் ராக பக்தியும்

வேதசாத் திரங்கள் விதித்தவா பூசை
விதங்களைச் செய்திடல் மாசு
போதாத் தீர்த்த யாத்திரை புரிதல்
புங்கவ னுமமுச் சரித்தல்
ஓதிடு மின்ன வைதிக பக்திக்
குரியவை, காதலே சிறப்பாம்
தீதறு மிராக பக்திக்குப், பற்றைச்
சிதைத்திறை யுடனுறல் வேண்டும். 151

(மாசுபோதா-அழுக்கு நீங்க. புங்கவன்-ஈசன். இன்ன-இத்தன்மையன. காதல்-பக்தி.)

774—உச்ச அனுபவம்

இந்திய வுணர்ச்சி முழுவது மழியு
மியல்புடைச் சமாதியிலெய்தும்
நந்தலில் பிரம வடிவமே யுச்சம்,
நவிலுல கம்படிக் கட்டாம்;
அந்தமா ருச்சி யடைந்தபின்வடிவொ
டனந்தநா மம்பெறு முலகம்
பந்தமில் பிரம வடிவமாய்த் தோன்றும்
பற்றறுத் துய்ந்தவர் தமக்கே. 152

(இந்திய-இந்திரிய, நந்தலில்-அழிவற்ற.)

797—மாயையைத் தடுக்கும் வழி

குளத்தினிற் படர்ந்த பாசியை யொதுக்கின்
கூடிடு மீண்டுமென் றுறும்
பிளப்புறு மூங்கிற் றட்டியாற் றடுப்பிற்
பின்னையுங் கூடுவ தில்லை;
அளப்புறு மாயை தன்னையோர் காலை
தடுத்திடின் மீண்டுமுற் றுடற்றும்;
உளத்தினிற் பத்தி ஞானமாம் வேலி
யுறுத்திடின் மீண்டிடா தொழியும். 153

(உடற்றும்-வருத்தும். உறுத்திடின்-அமைத்தால்)

799—பக்திக்குப் பின் ஞானம்

இயம்புமத் துவைத ஞானமே முடிபா
மெனினுநா மூதன்முத லாக
வயங்கிடு மடியோன் தலைவனை வணங்கி
வழிபடு வதுநிக ராயும்
மயங்கலில் பத்தன் பூச்சியன் றன்னை
வழிபடு வழக்கமொப் பாயும்
வயங்கொள விறையை வழிபடல் வேண்டும்,
மன்னுமத் துவைதமுற் றிடலாம். 154

(பூச்சியன்-பூஜிக்கத் தகுந்தவன்.)

சிவானந்த வாணி

(ஆர். ராமகிருஷ்ணன் எம். ஏ., எல். டி.)

பேளூர் மடம், 1929, ஏப்ரல் 30 செவ்வாய்

பிற்பகல் வேளையில், மாங்கீர் நகரில் வழக்கறிஞர்தொழில் செய்துவந்த ஸ்ரீ கங்கா சரண முகர்ஜி, அவருடைய புத்திரியுடனும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த வேறு சில அன்பர்களுடனும் மடத்திற்கு வந்து சேர்ந்தார். மகாபுருஷ மகாராஜருக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்த பிறகு, கங்கா சரணர் "மகாராஜ்! உங்களுடைய உடல்நிலை மிகவும் மோசமாக இருக்கின்றதே, சென்ற வருஷம் நான் பார்த்ததைக் காட்டிலும் இன்னமும் மோசமாக இருப்பதாகவன்றோ காண்கிறேன்" என்று பகர்ந்தார்.

மகாபுருஷர்: ஆம், உடல் மிகவும் மோசமான நிலையில் தான் உள்ளது. நாளுக்கு நாள் அது இன்னமும் மோசமாகி வருகின்றது. சரீரம் ஆறு மாறுதல்களுக்கு உட்பட்டது. கடைசி மாறுதலுக்கான (மரணம்) காலம் வந்து விட்டது. அப்படித்தானே வந்து தீரும்! அது சரீரத்தின் இயல்புதானே. உடல்கள் யாவும் என்றோ ஒரு நாள் அழிவுறுவது திண்ணம்.

கங்கா சரணர்: மடத்திலிருந்து எனக்கு வந்த ஒவ்வொரு கடிதத்திலும் உங்களுடைய உடல் நிலை மிகவும் மோசமாகி வருவதாகவே செய்தி வந்து கொண்டிருந்தது. உங்களைக் காண எனக்குப் பெரும் இச்சை உண்டாயிற்று. ஆதலால் இங்கு வந்தேன்.

மகாபுருஷர்: (சிரித்துக் கொண்டே) வெளிப்புறத்தைப் பார்ப்பதில் என்ன பயன் உண்டு? சொல், பார்க்கலாம். உட்புறத்தைக் காண்பதன்றோ காட்சியாகும். எல்லோருடைய உட்புறத்திலும் பகவான் இருக்கின்றார். இந்த ஜகம் முழுவதும் அவரிடமிருந்தே தோன்றியுள்ளது.

"பிராணன், மனம், இந்திரியங்கள் யாவும் ஆகாசம், வாயு, தீ, நீர், யாவற்றிற்கும் ஆதாரமாகவுள்ள பூமி — இவை இறைவனிடமிருந்தே தோன்றுகின்றன." இறைவனே யாவற்றையும் அடக்கியாள்கின்றவர். "இறைவனிடமுள்ள அச்சம் காரணமாகவே சூரியன் வெப்பம் தருகின்றான்". மீண்டும் இறைவனிடமே எல்லாப்பொருள்களும் லயமடைந்து விடுகின்றன. இந்த ஜகத் இறைவனிடமிருந்தே தோன்றி உள்ளது, இறைவனிடமே திரும்பச் சென்று லயமாகும். இறைவனிடமே ஜகத் இயங்கிக் கொண்டிருக்கிறது. பிறப்பு, இறப்பு, இவை நிகழ்ந்து கொண்டிருப்பவை. அவற்றைத் தடுப்பது யாராலும் முடியாத காரியமாகும். பகவான் ஒருவரே மாறுதலற்றவர், சுத்த, புத்த, முக்த இயல்புடையவர். அவரை நம்முள் கண்டறிவதுதான் வாழ்வின் நோக்கமாகும்- ஆண்டவனை அடைந்து விட்டோமானால் அனைத்தையும் அடைந்தோமெனலாம். அதன் பின்னர் உடல் இருந்தாலும் சரி, போனாலும் சரி—அது ஒரு விஷயமே அல்ல. இறைவன் எப்பொழுதும் நம்முள் பிரசன்னமாயிருக்கின்றார். எல்லா பூதங்களிலும் பரமாத்மாவாகவும் அமிர்த நிலையின் உறைவிடமாகவும் உள்ள அவர், அனைவரிடத்தும் வீற்றிருக்கின்றார் என்பதை அறிந்துணர வேண்டும்.

கங்காசரணர்: மகராஜ்! என் மனத்தின் கண் வினா ஒன்று எழுகின்றது' இறந்த பின்னர் எல்லோருமே பிரேத சரீரத்தில் (யாதனா சரீரத்தில்) வாழ்ந்திருக்க வேண்டுமா?

மகாபுருஷர்: எதற்காக? இறைவனிடம் நல்ல பக்தியுடைய பகவத் பக்தர்கள் ஏனோ பிரேத சரீரத்தில் வாழ்ந்திருக்கவேண்டும்? அத்தகையவர் இறைவனிடம் ஒன்றித்து விடுகின்றனர், முக்தி பெறுகின்றனர்.

கங்கா சரணர்: அங்கனமானால், சிரார்த்தம் முதலான இந்தக் கிரியைகளெல்லாம் ஏற்படுத்தப் பட்டிருப்பதின் பொருள் தான் என்ன? இந்த ஈமச் சடங்குகளையும் ஆண்டு தோறும் செய்யும் சிரார்த்தங்களையும் அனைவரும் செய்தாக வேண்டாமா?

மகாபுருஷர்: ஆம், செய்து தானாகவேண்டும். இதுவே சாதாரண விதி. அதன்படியே அனைவரும் ஒழுகி வருகின்றனர். ஆனால் சில விசேஷமான சந்தர்ப்பங்களில் பொது விதிக்கு விலக்கு உண்டு. உதாரணமாக உனது மனைவியின் விஷயத்தில் இந்த சடங்குகளையெல்லாம் நீ செய்து வரலாம். ஆனால் அவற்றைச் செய்யாது போவாயானால் நஷ்டமொன்றும் இல்லை. உனது மனைவி மகாபக்தையாவாள். அவளுடைய விஷயமே தனிப்பட்டது. உனது மனைவி உடலை உகுத்ததுமே அவள் கைலாசத்தை நோக்கிச் சென்றதை நான் தெளிவாகக் கண்டேன். அவள் வெகு உயர்ந்த நிலையை அடைந்து விட்டாள். இதைப்பற்றி நீ ஐயமின்றி இருக்கலாம்.

இதைக் கேட்டதும் கங்கா சரணர் திடீரென்று உரக்கக் கதறியழலானார். கண்ணீர் நிறைந்த கண்களுடன் கையைக் கூப்பியவராய் மகாபுருஷரின் அடிபணிந்து, "மகராஜ்! எனக்கு வரம் ஒன்று அருளல் வேண்டும். ஜகன்மாதாவினுடைய திருவடித் தாமரைகளில் பக்தியும் நம்பிக்கையும் எனக்கு ஏற்படுமாறு செய்வீர்களாக! இறுதியில் அன்னையின் திவ்விய சரணங்களை நான் அடையுமாறு செய்வீர்களாக" என்று வேண்டிக் கொண்டு சிறு குழந்தை போல் மீண்டும் அழலானார்.

மகாபுருஷர்: கங்கா சரணருடைய சிரசில் கையை வைத்து ஆசீர்வதித்துவிட்டு அவரை நோக்கி, "மகனே, அவ்வாறே ஆகுக! உன்னிடம் பக்தியும் நம்பிக்கையும் ஏற்கனவே உள்ளன. அவை இன்னமும் பெருகும். நான் உன்னை நன்றாக ஆசீர்வதிக்கின்றேன். உனக்கு நல்ல பக்தி விசுவாஸம் உண்டாகட்டும். நான் கூறுகின்றேன், கேள், மகனே. உனக்கு எல்லாம் நல்லதாகவே வந்தமையும். உன் மீது ஜகன்

மாதா மிகுந்த கிருபை வைத்திருக்கின்றாள்'' என்று கூறினார்.

கங்கா சரணர்: நீங்கள் அவ்வாறு கூறினால் நிச்சயமாக அவ்வாறே ஆகும். உங்களுடைய சொல்லுக்கு ஜகன்மாதா நிச்சயமாகச் செவி சாய்ப்பாள். நீங்களே எங்களுடைய பலம், நம்பிக்கை யாவும் ஆவீர்கள்.

மகாபுருஷர்: ஜகன் மாதா என் சொல்லுக்குச் செவி சாய்ப்பாள், வாஸ்தவம் தான். உனது சொல்லுக்கும் கூடத்தான் செவி சாய்ப்பாள். எவர் எவர் முழு உள்ளத்துடன் கரைந்துருகி அவளை அழைக்கின்றனரோ அவருடைய சொல்லுக்கெல்லாம் அவள் செவி சாய்ப்பாள். தயை! தயை! அவளுடைய தயை இன்றி நாம் செய்து முடிக்கக்கூடியது எதுமே இல்லை. இறைவா போற்றி! கருணை மூர்த்தியான குருவே போற்றி!

மகாபுருஷ மகாராஜருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று ஆறுதல் உற்ற கங்காசரணர், மேலும் இரண்டொரு வார்த்தைகள் பேசி விட்டு விடைபெற்றுக் கொண்டார். மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக நமஸ்காரம் செய்து எழுந்தனர். கங்காசரணருடைய புத்திரியும் நமஸ்காரம் செய்துவிட்டு மகாபுருஷருடைய ஆசீர்வாதத்தை வேண்டிக் கொண்டாள்.

மகாபுருஷரும் மிகவும் மெல்லிய குரலில் அப் பெண்ணைப் பார்த்துக் கூறினார்: "அம்மா! நீ மிகுந்த சாந்தியைப் பெறுவாயாக. உனது புருஷர், மகன், மகள், உறவினர் யாவருமே சுகமாகவிருக்கட்டும்! ஸம்ஸார வாழ்வினில் சுகம் கிடையாது. அதில் உள்ள துக்கத்துடனும் கஷ்டத்துடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதில் உள்ள சுகம் சொற்பமேயாகும். இதற்கிடையில் ஸம்ஸார வாழ்வினில் யார் பகவத் பக்தி கொண்டுள்ளனரோ அவர்களுக்கு மட்டுமே ஓரளவு சாந்தி கிட்டுகின்றது. துக்கமோ, கஷ்டமோ எதுவரினும் அவர்கள் அதனால் பாதிக்கப்படுவதில்லை. எனெனில் எல்லாம் ஆண்டவனுடைய அளிப்பே என்பதை அவர்கள் அறிவார்கள். எந்த பகவான் சுகத்தைக்கொடுக்கின்றாரோ அதே பகவான் தான் வேறொரு சமயத்தில் கஷ்டத்தையும் துக்கத்தையும் தருகின்றார். ஆதலால் எல்லாமுமே இறைவனுடைய ஆசீர்வாதம்தான் என்று அறிந்து அவர்கள் எதுவரினும் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுகின்றனர். சுகம் வரும் பொழுது அவர்கள் பெருமிதம் கொள்வதில்லை. துக்கம் வரும்போது சோர்ந்து வீழ்வதுமில்லை. ஸம்ஸாரத்தில் சுகம் அநித்யமானது, தாற்காலிகமானது; அதேபோல் துக்கமும் அநித்தியமானது தான். இதெல்லாம் வருகின்றது, போகின்றது. ஒன்றும் நிலைத்து இருப்பதில்லை. பகவான் ஒருவரே ஒரே நித்தியப் பொருளாகவும், சாந்திக்கு உறைவிடமாகவும் இருக்கின்றார். அவரைப் பற்றிக் கொள்வாயாக, அம்மா. அப்பொழுதுதான் வாழ்க்கையில் சாந்தியைக் காண்பாய்''.

சிறு பெண் ஒருத்தி மகாபுருஷருக்கு நமஸ்காரம் செய்தாள். அவளுடைய சிரஸை ஸ்பர்சித்துவிட்டு மகாபுருஷர் கூறினார்: "இவர்கள் யாவரும் அன்னையின் சொரூபங்கள். ஜகத்தில் உள்ள பெண்டிர் அனைவரும் ஜகன்மாதாவின் வடிவங்களே ஆவர்''.

மாலைப்பொழுது வருவதற்குச் சிறிது முன்னர், பக்தை யொருத்தி மகாபுருஷருக்கு நமஸ்காரம் செய்து விட்டு, "மகராஜ்! உங்களது உடல் நிலை எவ்வாறு உள்ளது என்று கேட்டாள்.

மகாபுருஷர்: அம்மா! உடல் நிலை நன்றாக இல்லை. இது கிழட்டு உடல் அல்லவா? இது எவ்வாறு சுகமாக இருக்கும்?

பக்தை: உங்கள் சாப்பாடும் கூட மிகவும் சுருங்கி விட்டதே.

மகாபுருஷர்: ஆம், நடுப்பகல் வேளையில் கொஞ்சம் பருப்பும் சோறும் இரவில் கொஞ்சம் பாலுமே நான் உட்கொள்ளுகின்றேன். இதற்கு மேலாக நான் ஜீரணிக்க முடிவதில்லை. அத்துடன் சாப்பிடவேண்டும் என்ற எவ்விதமான ஆவலும் எனக்கு இருப்பதில்லை. அதைச் சாப்பிட வேண்டும், இதைச் சாப்பிடவேண்டும் என்ற விருப்பமும் எனக்கு இல்லை. உடல் தரித்திருப்பதற்காகவே தான் உணவு உட்கொள்ளுவது அவசியமாகின்றது. ஆதலால் ஒரு சிறு உணவை நான் உட்கொண்டு வருகிறேன். உடல் சில நாள் தங்கியிருக்கும் வரையில் பகவானை ஸ்மரிக்க உதவுவதற்காகத்தான் இவ்வாறு செய்கின்றேன். பகவானைத் தியானிப்பதையும் சிந்திப்பதையும் தவிர வேறு பற்று எதுவும் எனக்கு இல்லை. இறைவனை ஹிருதய கமலத்தில் தரிசிக்கக் கூடுமானால் அதுவே ஆனந்தமாகும். இந்த ஸம்ஸாரம் இரண்டொரு நாள் வாழ்வேயாகும். தந்தை, தாய், சகோதரர், உறவினர், தோழர்—எல்லாம் அநித்தியமேயாகும். மரணம் வரும் பொழுது இவ்வுலகை விட்டு நாம் போய் விடுவோம். அது இருந்தபடியே இருக்கும்.

அந்தராத்மாவாக உள்ள ஆண்டவன் மட்டுமே எல்லாக் காலத்திலும் இருப்பவர், நிலைத்திருப்பவர். அவரே நித்ய வஸ்து.

பக்தை: மகராஜ்! எங்களுக்கு என்ன கதி கிட்டுமோ? நாங்களோ மாயையில் கட்டுண்ட ஜீவர்கள். இந்த ஸம்ஸாரத்தின் மீது எங்களுக்குப் பற்று மிகுந்துள்ளது. இந்தப் பற்றைத் தவிர்த்துக் கொள்ளுவதும் எங்களால் முடியாததாகின்றது. எவ்வளவோ துக்கத்தையும் கஷ்டத்தையும் அடைந்தும் ஸம்ஸாரத்தை மறக்கமுடிவதில்லை.

மகாபுருஷர்: பகவான் ஒருவரே நம்முடைய கதியாவார். அவரிடம் சரணடைவாயாக. அவரே எல்லாமும் ஆவார். "அப்பன் நீ, அம்மை நீ, தந்தையும், தாயும், சகோதரனும், பந்துவும், தோழனும் எல்லாமும் பகவானே தான்." அவரை வியாகுலத்துடன் அழைப்பிப்பாயாக. அவர் நிச்சயமாகக் கிருபை செய்வார். துக்க மயமான இந்த ஸம்ஸாரத்தில் அவர் ஒருவரே சுகப் பொருளாக இருக்கின்றார். ஒட்டகம் முட்செடியைத் தின்பதைப்பற்றி குருதேவர் கூறுவார் (ஒட்டகங்களுக்கு முட்செடிகளில் ஆசை அதிகம். அவைகளைத் தின்னத்தின்ன ஒட்டகங்களின் வாயிலிருந்து ரத்தம் அதிகமாகப் பெருகும், என்றாலும் அவைகள் முட்செடிகளைத் தின்பதை விடுவதில்லை. கொடிய துன்பதுயரங்களை மிகுதியாக அனுபவித்தாலும் இலௌகிகர்களுக்கு நற்புத்தி உண்டாவதில்லை.)

ஸம்ஸாரத்தில் அழுந்தியுள்ள ஜீவனுக்கு ஸம்ஸாரத்தில் கிடைக்கும் சுகமும் இத்தகையது தான். இறைவனுடைய கிருபை இன்றி எதையுமே பெறமுடியாது, அம்மா.

கொஞ்ச நேரம் சும்மா இருந்து விட்டு மீண்டும் பகர்ந்தார் மகாபுருஷர்: "ஸம்ஸாரத்தின் அநித்தியத் தன்மையை உணருவது சுலபமான விஷயம் அல்ல, இறைவனுடைய கிருபையின்றி இந்த அறிவு ஏற்படாது. நன்றாகக் கதறியழுது பிரார்த்தனை செய்வாயாக. அப்பொழுது அவரது கிருபை கிட்டும். அவர் உள்ளத்திலேயே உறைகின்றார். கிருபையினாலே மாயையின் மறைப்பினை அவர் எப்பொழுது நீக்குகின்றனரோ, அப்பொழுது தான் அவரைக் காணமுடியும். கிருபை, ஈசுவர கிருபை ஒன்றே நமக்கு வேண்டுவது; அதையன்றி வேறு உபாயம் ஏதும் இல்லை."

குருதேவரிடம் பிரார்த்தனை

ஓதாமல், கற்றறிந்த புலவோர் தாமும்
உணராத பரம்பொருளை உணர்த்த வந்த
வேதாந்தக் கலைக்கதிரே! சிலைக்கல் லுள்ளே
விண்ணமுதைக் கடைந்தெடுத்த வீர
வெற்பே!
போதாந்த வாழ்க்கையினல் உலகிற்
கெல்லாம்
போதித்த புகழ்மேனிப் புனிதனே! உன்

பாதார விந்தத்தேன் வாய் மடுத்துப்
பண்மிழற்றப் பரமஹம்ஸ, பாலிப்பாயே!
துய்யமணிச் சாரதா பீடங் தன்னில்
சுத்தகுரு பரவடிவாய்த் துலங்கி, அன்பர்
மையிருளைக் கடைக்கண்ணால் போக்கி
உய்யும்
வகையளிக்க வந்த அருள் வள்ளலே
இப்
பொய்யனேன்புலைவாழ்வைப் புனிதமாக்கிப்
பொன்னடிக்கே தொண்டு செயும்
போதம் நல்காய்
ஐயனே! பரமஹம்ஸ அண்ணலே! என்
ஆரமுதே பேரரசே! அன்புச்-சோதி!

வையமெலாம் அருளொளியை வாரிக்
கொட்டி
வளம் பெருக்க உளங் கொண்டு, மனம்
வாக் கெட்டாச்
செய்யவிவே கானந்தக் கொண்டல் தன்னைச்
சிந்தையுவந் தளித்திட்டோய்! தினையும்
வாழ்வில்
உய்யும்வகை காணது மயங்கு கின்ற
ஒருவன்எனக் கருள்புரிய உனக்கா
காதோ?
ஐயனே! நீவெறுத்தால் பேதை யென்னை
ஆதரிப்பார் யார்? பரம ஹம்ஸ மூர்த்தி!
கோடிதின கானுமொளி மழுங்க ஞானக்
குருவடிவாய் எழுந்தஒளிக் குன்றே!
ஒன்றித்
தேடிடுநல் லன்பர்கள்தம் தேட்டம் தீரத்
திருக்கடைக்கண் ணோக்கருளும் திவ்ய
வள்ளால்!
ஆடிக்காற் றினில்பட்ட சருகாய்ச் சுற்றி
அலையுமனக் குரங்கடக்கும் ஆற்றலில்லாப்
பேடியெனக் குன்ஞான வீறு நல்காய்,
பேச்சு மனம் புலன்கடந்த பெரிய தேவே'

வாடிநிற்கும் பயிரென, நின் கருணை வேண்டி
மனஞ் சோர்ந்து கருகிநிற்கும் மதலையன்மேல்
கோடிபிழை யிருப்பினுமே பொறுத்தாட் கொள்ளல்
குணக்கடலாம் உனக்குரிய கொள்கை யன்ரே?

வேடிக்கை மாய்கைவிளை யாட்டில் நாளை
வீணக்கிப் பாழான வினையி னேன், மன்
ருடியுனைச் சரணடைந்தேன் வெறுத்தி டாமல்
அணைத்தருளாய் பரமஹம்ஸ அமுதே! போற்றி!

"பரமஹம்ஸ தாஸன்"

விவேகானந்த வைபவம்

R. ராமகிருஷ்ணன் M. A. L. T.

3-சாதகர் பண்பு

பிறவியெடுத்துள்ள ஜீவன் செய்யும் பெரு முயற்சிகளுள் மிக முக்கியமானது பிறவியை ஒழிக்கச் செய்யும் பிரயத்தனமே யாகும்.

பிறவியெடுப்பது பெரும் துன்பம் என்ற உணர்ச்சி எல்லோருக்கும் எளிதில் வந்து விடுவதில்லை. வலையில் சிக்கிய மீன் அடியில் போய் இருந்து கொண்டு தனக்கு ஆபத்து ஏதுமில்லை என்றெண்ணிக் கடைசியில் வலைஞன் கையில் சிக்குவதையொப்ப, மோகித்துக் கிடக்கின்றனர் மக்களிற் பெரும்பாலோர். ஒரு சிலரே இந்த ஸம்ஸார வாழ்வைக் காட்டுத் தீயெனக் கண்டு அதனின்றும் தப்பியோடத் தவிக்கின்றனர். இத்தகைய மக்களை முமுக்ஷுக்கள் என்கின்ரேம். அதாவது விடுதலையை நாடிப் பாடுபடுவோர் என்கின்ரேம்.

முமுக்ஷு ஒருவன் செய்கின்ற முயற்சியையே ஆத்ம சாதனை, சமயப் பயிற்சி, பாரமார்த்திக வாழ்வு என்றெல்லாம் குறிப்பிடுகின்ரேம்.

முமுக்ஷுவினது சரிதை வெகு சுவாரஸ்யமானது. சங்கராசாரியாருடைய புகழ்மிக்க நூலாகிய விவேக சூடாமணி போன்ற நூல்களில் இதன் வரலாறு அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

முமுக்ஷு என்ற அதிகாரியாவதற்கு ஒருவனிடம் சில குணங்கள் அத்தியாவசியம் இருக்கவேண்டும். நித்தியப் பொருளையும் அநித்தியப் பொருளையும் பகுத்தறியும் சக்தி அவனிடத்து இருக்க வேண்டும். விரக்தி வேண்டும். சமம், தமம் போன்ற அருங் குணங்கள் அமையப் பெறுவதும் இன்றியமையாதது. அத்துடன் மோக்ஷ தாகம் வேண்டும். உலக வாழ்வின் துயரை, அற்பத் தன்மையை நன்குணர்ந்த முமுக்ஷு தனக்கு வழி காட்டும் உத்தமரை நாடுகின்ருன். மேதையும், ஞான சித்தியும், கருணையும், அருட் சக்தியும் நிறைந்த குரவர் ஒருவரைக் கண்டு அவரிடம் தனது ஆவலைத் தெரிவித்துக் கொள்ளுகின்ருன். அவர் இவனுக்கு அபயம் தருகின்ருர். இவனது சொரூபத்தை எடுத்து விளக்குகின்ருர். ஐயங்களைத் தீர்த்து வைக்கின்ருர். தேசிகருடைய உபதேசத்தைப் பெற்ற சிஷ்யன் சாதனைபயின்று சாக்ஷாத்காரம் பெறுகின்ருன். பரிபூரண நிலையை எய்துகின்ருன். பெரும்பேறு அவனுடையதாகின்றது.

இதுவே சமய வாழ்வு என்பது. ஸம்ஸார பந்தத்தில் சிக்கி ஜீவன் பரிதவிப்பதும், அதன் தளைகளிலிருந்து தப்புவதற்கு அவன் செய்யும் வீர முயற்சியும், சரியான சமயத்தில் இறைவனது திட்டத்தின்படி ஞானகுரு ஒருவர் வாய்ப்பதும், குரு நல்ல சிஷ்யனை அடையக் காத்திருப்பதும் சிஷ்யன் தனக்கு ஏந்த குருவைத்தேடி அலைவதும், இருவரும் சந்தித்துப் பழக்கம் கொள்ளும் அற்புதமும், அவர்களிடையே ஏற்படும் நேசபாசமும், குரு சிஷ்யனைத் தனது நிலைக்கு உயர்த்தும் முறையும், குரு சிஷ்ய ஐக்ய பாவனையும், குருவினது பணியைச் சிஷ்யன் சிரத்தையுடன் ஆற்றுகின்ற வகையும், சிஷ்யன் காலக்கிரமத்தில் தான் குருவாகிப் பிறருக்கு ஞான ஒளியைத்தந்து குரு சிஷ்ய பரம்பரையை வளர்த்துப் போவதும்—இதெல்லாம் தெய்விக சௌந்தர்யம் நிறைந்ததொரு மகா காவியம் போல அமைந்து, சிந்தித்துப்பார்ப்போருக்கு வியப்பையும் பேரானந்தத்தையும் தரவல்லது. சாதகன் சித்தனவதும், முமுக்ஷு முக்தனவதும், ஜீவன் சிவனவதும்—இதெல்லாம் பிரபஞ்ச கர்த்தாவும், ரக்ஷகரும் ஆகிய

திவ்விய சூத்திரதாரன் நடாத்துகின்ற மிக அற்புத ரஸம் வாய்ந்த நாடகக் காட்சிபோல் ஆகும். சிற்றரசை வெறுத்து உலகப் பேரரசை அடைய அவாக் கொண்டு திக் விஜயம் செய்து கொண்டேயிருந்த வீர அலெக்ஸாண்டரைப் போல ஸ்வராஜ்ய சித்தி எனும் சுதந்திர நிலையையடைய பகீரதப் பிரயத்தனம் செய்யும் சாதகனுடைய சரித்திரம் கவி சிரேஷ்டர் ஒருவருடைய இதிஹாஸம் போன்ற காம்பீர்யம் நிறைந்த கதையாக அமைகின்றது. இந்த இதிஹாஸம் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுவதின் ரகசியம் என்னவென்றால், என்றோ ஒரு நாள் ஒவ்வொரு ஜீவனும் இந்தப் பெருமுயற்சியில் இறங்கியேயாக வேண்டும் என்பது தான். ஷேக்ஸ்பியர், காளிதாசர் போன்ற நாடகாசிரியர்களுடைய நாடகங்களைப் படிக்கும்போது அவற்றில் உள்ள நாடகப் பாத்திரங்கள் நமது உள்ளங்களைக் கவர்வது ஏன்? எல்லா மாந்தரிடமும் புதைந்து கிடக்கும் ஆழ்ந்த எண்ணங்களும், உணர்ச்சிகளும் ஆசாபாசங்களும் நல்லியல்பும் தீய இயல்பும், இலட்சியங்களும் மனப் போக்கும் அந்த நாடகப்பாத்திரங்கள் மூலம் காட்டப்படுவதால் நாம் அவர்களுடைய கதையில் மிக்க சுவையைக் காண்கின்றோம். அம்மாதிரியே அத்யாத்ம வாழ்க்கையின் உணர்ச்சி நம் அனைவரிடமும் ஏதோ ஓர் அளவில் இருப்பதால் சாதகர்களுடைய முயற்சிகள், சித்தர்களுடைய அனுபவங்கள் இவற்றைப் பற்றிய வரலாறு நம்மை வசீகரிக்கின்றது. ஞானசாதனைக் கதை, இப்பொழுதில்லாவிடினும் என்றோ ஒரு நாள் நம்முடைய ஆத்ம கதையாக அமைவது திண்ணம். இதை நமது உள்ளம் தானாக உணருகின்றது. இரத்த பாசமுடையவர்கள் ஒருவரையொருவர் அறியாதிருந்து புதியதாக சந்திக்கும் பொழுது ஏதோ ஒரு சக்தியால் தம்மிடையே பிணைப்பு ஒன்றை உணருவதைப் போல, நமது மனம் ஞான சாதகர்களிடம் பற்றுக் கொள்ளுகின்றது.

இம்முறையில், விவேகானந்த சுவாமிகளுடைய கதை எல்லோருக்கும் பிரியமான பெரிய தொரு விருந்தாக அமைந்துள்ளது. அத்யாத்ம முயற்சி எனும் தத்துவத்திற்கே அவரது வாழ்வு விளக்குப் போல விருந்தது. ஞான சாதனையின் வித்து முதல் கனிவரையில் உள்ள எல்லாப் பகுதிகளும் அவரது ஜீவியத்தில் சோபித்தன. சமயப் பயிற்சி எனும் மகாநதியின் மூலஸ்தானம் முதல் சங்கம க்ஷேத்திரம் வரையிலுள்ள எல்லாப் போக்குகளும் வெள்ளப் பெருக்குகளும் சுழல்களும் நீர் வீழ்ச்சிகளும், நீர்ப்பாசன சேவைகளும் அவருடைய சாதனையிலும் சாக்ஷாத்காரத்திலும் வாழ்க்கைப் பணியிலும் காணக் கிடக்கின்றன. மனப் பூர்வமாக ஞான சாதனையில் ஈடுபட விரும்புவோருக்கு விவேகானந்தருடைய வரலாறு நல்லதொரு வழிகாட்டி போன்று உதவ வல்லது.

தர்மப் பயிற்சிக்கு முக்கிய சாதனமாக இருப்பது சரீரம். அதை வலிவுடைய தாக்கிக் கூரிய கருவி போன்று வைத்துக் கொள்வது சாதகனுடைய முதற் கடமையாகும். பலஹீனனால் இந்த ஆத்மாவை அடைய முடியாது எனபது வேதவாக்கு. விவேகானந்தர் எத்தகைய உடல் திட்பம் பெற்றவர் என்பது அவரது படத்தைப் பார்ப்பவர்களுக்குக்கூட நன்கு விளங்கிவிடும். இரும்பையொத்த தசைகளும் எஃகைப் போன்ற நரம்புகளும் வேண்டும் என்று அவர் கூறிய கூற்றுக்கு அவரே நிதரிசனமாக விளங்கினர். முதலில் பாரதம் முழுவதையும் பின்னர் பார் முழுவதையும் சுற்றி வந்த அவரது பாதங்களின் வலிமையும், ஜீவ சேவையைச் சிவ பூஜையாக இயற்றிய அவரது திருக்கரங்களின் மாண்பும், சமரஸத்தையும் சாந்தியையும் பூலோக மக்களுக்குச் சொரிந்த அவரது வாக்கின் பெருமையும் ஈடும் எடுப்பும் இல்லாத் தன்மையின வாயின. பிரம்மசரியம் எனும் செந்தீயில் பழுக்கக் காய்ச்சப்பட்டு வஜ்ரம் போன்றிருந்தது அவரது உடல். ஆனாலும் சிறந்த சாதகர்களையொப்ப அவர் ஸ்தூல சரீர உணர்ச்சியே அற்றவராக இருந்தார். தேகாத்மபுத்தி அவரிடம் சிறிதேனும் இல்லை. குறைபாடற்ற உடலுக்குள் இருந்த அவரது மனம் தூய்மை, விவேகம், வைராக்கியம், நிறைந்ததாக இருந்தது. அவருடைய புத்தியோ வெகு தீட்சண்யமானது. அத்யாத்ம சாதனைக்கு அவர் உத்தம அதிகாரியாகத் திகழ்ந்தார். சிறுபிராயத்தினின்றுமே அவரிடம் தியான சக்தி மிகுந்து காணப்பட்டது. பாலியத்திலேயே அவரது மனம் துறவி வாழ்க்கையே சிறந்ததாகக் கருதலாயிற்று. நூல்கள் பலவற்றை அவர் கற்றாரெனினும் வெறும் சொற்களும் கருத்துக்களும் அவருடைய ஆத்ம தாகத்தைத் தீர்க்கவில்லை. நேரான காட்சியாலன்றி வேறு எம்முறையிலும் திருப்தி யுறாத ஞானப்பசி அவரை வாட்டிவந்தது. கடவுளைப் பற்றி வீண் பேச்சுப் பேசுவோரை அவர் ஒரு பொருட்டாகக் கொள்ளக்கூட வில்லை. "நீர் கடவுளைக் கண்டதுண்டா?" என்ற கேள்வியை அவர் தர்மப் பிரசாரகர்களிடம்

கேட்டுவந்தார். இது வெறும் விளையாட்டுக் கேள்வியல்ல. அவரது கடவுள் வேட்கை எவ்வளவு வேகமுடையது என்பதையே அது காட்டுகின்றது. கிணற்றில் தண்ணீர் இருக்கிறது என்று கூறினால் தாகமில்லாதவர்கள் அதைக் கேட்டுத் திருப்தியுறலாம். தாகமுடையவனே தண்ணீர் தனது கைக்கு வந்தாலன்றிச் சாந்தியுறமாட்டான். அவ்வாறு பிரத்தியட்ச தரிசனத்திற்குப் பசித்திருந்தார் விவேகானந்தர். சீக்கிரத்திலேயே அவருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருடைய அருள் கிடைத்தது. இராமகிருஷ்ணர் குருவாக இருப்பதற்கேற்ற குணங்கள் யாவும் நிறைந்தவர். விவேகானந்தரோ உத்தம சிஷ்யர். இவ்விருவருடைய சந்திப்பும் உறவும் இரு பெரும் சுடர்கள் ஒன்றையொன்று தாக்கி தேஜோ மயமான ஜோதியை எழுப்புவன போன்று அமைந்தன. இராமகிருஷ்ணரைப் பேராழி எனவும் விவேகானந்தரை அதில் வந்து சங்கமமாகும் வெள்ளப் பெருக்கு என்றும் கூறலாம். விவேகானந்தர் தமது ஐயங்களையெல்லாம் தங்குதடையின்றி வெளியிட்டார். எந்த சாதாரண குருவும் அவற்றைக் கேட்டுப் பிரமித்துப் போயிருப்பான். ஆனால் இராமகிருஷ்ணர் ஒரு பரம குரு, பரமாசரியர். அவர் விவேகானந்தரது சந்தேகங்கள் யாவும் நீங்குமாறு அவருக்கு மெய்ப்பொருட் காட்சியைத் தந்தருளினர். பசித்து வந்த இளைஞர் ஞானமிர்தத்தை உண்டு பசி யாறினர். உயர்ந்த நிர்விகற்ப சமாதி நிலை விவேகானந்தருக்குக் கிடைத்தது. பின்னர் குருவினுடைய லோக கைங்கரியத்தைச் செய்து முடிப்பதில் அவர் ஈடுபட்டார். இராமகிருஷ்ண தாஸராகத் திருப்பணி யாற்றினர். பரிவ்ராஜகராகத் தீர்த்த யாத்திரை செய்தார். உலகினருக்கு வேதாந்த வுபதேசம் செய்தார். இராமகிருஷ்ணர் வேறு விவேகானந்தர் வேறு என்று சொல்ல முடியாதபடி குருவும் சிஷ்யரும் ஒன்றித்துப் போயினர். இன்று பல்லாயிரக் கணக்கான ஆடவர் மகளிருக்கு இராமகிருஷ்ண— விவேகானந்த ரெனும் ஞான சூரியன் அகவிருளை நீக்கும் ஒளியாக இருந்து வருகின்றது.

நமது சிகர ஜோதி

துன்னரும் பெருமை! உன்னரும் அற்புதம்!

ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருமான் பிறந்தவாற்றையும், வளர்ந்த வாற்றையும், உலகியற் பகையாயிருந்து அரும்பெரும் தவங்கள் புரிந்தவாற்றையும், எண்ணற்ற அனுபூதிகளை மிக விரைவில் தாம் எய்தியவாற்றையும், பிறர்க்கு அருளால் எளிதே வழங்கிய வாற்றையும் சிந்திப்பார் 'என்னே! அவரது துன்னரும் (அடைதற்கரிய) பெருமை! அவரது வாழ்வு உன்னரும் (நினைத்தற்கரிய) அற்புதம்!' என்று முடிவு கூருதிரார். மண்ணுலகத்தார்க்கு அவர் 'திறங்கள் காட்டியிட்டுச் செய்து போன மாயங்களை' உண்மையாக உள்ளவாறு அறியவல்லார் எத்தனை பேர்! அவர் போன்ற ஒருவர்க்கன்றிப் பிறர்க்கு அது முற்றும் விளங்கும் தன்மையதாமோ? அவரது திவ்விய வாழ்விலே தெய்வத்தன்மை அவரைச் சுற்றி ஒரு சக்தி மண்டலம் போன்று சூழ்ந்திருந்தது; அவரது ஞான அனுபூதி வகைகள் வானம் போலப் பரந்திருந்தன; எனினும் ஒவ்வொன்றும் கடலென ஆழ்ந்திருந்தது: உயர்வற உயர்ந்த 'மஹா பாவம்' (பிரேமையின் உச்ச நிலை) என்னும் பக்தி நிலையும், நிர்விகற்ப சமாதி என்னும் ஞான நிலையையும் அவர்க்குக் கிட்டியிருந்தன; நமது அறியும் திறனுக்கெல்லை காணினும், ஸ்ரீ ராமகிருஷ்ணரது அனுபூதிக்கு முடிவு காண்பது அரிது என்பர் ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர். சுருங்கச் சொல்லில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது பெருமையைச் 'சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில்லாத' பெருமை என்று குறிப்பிடலாம்; அவரது வாழ்வை ஓர் அற்புதம் என்னலே போதும், அதனின்றும் மிகுதியாகக் கூறுதலும் இயலாததாகும்.

சாதாரணமான ஞானியார்க்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கும் உள்ள வேறுபாடு கருதத்தக்கது. அரும்பாடுபட்டு மெய்ஞ்ஞானப் பேற்றைஎய்தி இன்பமடைவார் ஞானியருட் பெரும்பாலார்; ஆனால் ஒரு சிலரே தமது வெற்றியை உலகத்து வாழும் மக்கட்கெல்லாம் பொதுவுடைமையாக்கும் பேரருள் வாய்ந்தவராவர். ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினை

நிரம்பப் பருகிக்களித்துத் திரிவார் பலராவார் : ஆனல் ஒரு சிலரே தமக்கென வாழும் நினைவின்றிப் பிறர்க்கெனவே பிறவியெடுக்கும் கருவிலே திருவுடையராவார். தம் உள்ளத்தே ஞானக் கனலை மூட்டி, உலக மாயையெனும் கடுங்குளிரினின்றும் தமைக் காத்துக்கொண்ட பெரியார் பலராக, ஒரு சிலரே தமது உள்ளத்தே ஞானத் தழல் மூட்டி, அதனைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து, தாமே ஞானத் தழல் மயமாகியும், காட்டுத் தீப்போல் அணுகியதை எரிக்கும் சக்திமயமாகியும், உலகச் சார்பிலே தோய்ந்த உள்ளத்தாராயினும் அவரது உள்ளங்களில் எளிதே ஞானக் கனலை மூட்டும் அருள்—திறன் பெற்றவராய் ஒளிர்கின்றனர். இத்தகைய ஒரு சிலரது வாழ்க்கையையும் உள்ள அமைப்பையும் ஆராய்கின்ற காலத்து அன்னர் தமது முத்தியைக் கருதாது, அதனையே உலகத்தாரது உய்விற்காக மன்னுயிர்ப்பணி யென்னும் தீயில் ஓமஞ் செய்து, அதனலே பந்தமுக்திகள் இரண்டையும் கடந்த பரம்பொருளோடு ஒன்றித்து விடுகின்றனர் என்பது புலனகின்றது. அம் மாதிரியான அருட்கடல் அனையார் தமது தெய்வ இயல்பினை மேற்பூச்சான மனித இயல்பாலே மறைத்து மனிதவடிவு கொண்டு சிறிது சாதனத்தால் அம்மனித இயல்பினை எளிதே பெயர்த்தெறிந்து, தெய்வ அருள் மடையைத் திறந்து விடுகின்றனர். வெளிப் பார்வைக்கு அப்பெரியாரது வாழ்க்கையில் தோன்றும் அற்ப சாதன முயற்சியையும், அதன் பயனக அவரிடமிருந்து பெருகும் ஞான—அன்பு—ஆற்றல் வெள்ளத்தையும் நோக்குங்கால், உண்மையிலே அவர் யாண்டும் தெய்வ இயல்பு வாய்ந்தவரே என்பதும், அவரது சாதன முயற்சியும் தமக்காக வன்றிப் பிறர்க்கு வழிகாட்டுதற்கென அமைந்தது என்பதும் தாமே வெளியாகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இத்தகைய உயர்ந்த தரத்தினைச் சார்ந்திருந்த பெரியார் என்பது அவரது சரித்திரத்தை விருப்பு வெறுப்புகளின்றி நடுநிலையில் நின்று காண்பார்க்கு விளங்கும். தவமே உருக்கொண்டு வந்து தவம் செய்ததோ என்னும்படி அமையும் அவரது ஞானத் தவ வாழ்க்கைக்கு அவரது சுயமுத்தி ஒரு தக்க மேதக்க இலக்ஷியமாகாது என்பது வெளிப்படை. இதனை நன்குணர்ந்த சுவாமி விவேகானந்தர் அவரைப் பற்றிக் கூறும்போது, பின்வரும் பொருள்படக் கூறுகின்றனர் : "சாதாரண மக்கள் தம்மிடத்து மூலாதாரத்து உறங்கும் குண்டலினி சக்தியை விழிக்கச்செய்து ஞான வாழ்வைத் தொடங்குவார் ; ஆனல் ஸ்ரீ ராமகிருஷ்ணரோ தமது தவத்தால் விச்வ (உலக) குண்டலினியையே விழிக்கச் செய்துவிட்டனர். அதனல் ஞான விழிப்பும் ஞானக் கிளர்ச்சியும் உலகம் எங்கணும் தென்படுகின்றன." இதுவே இவரது வாழ்க்கையில் ஓர் உன்னரும் அற்புதம் ; இதுவே இவரது தனிச்சிறப்பு.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அந்திம காலத்துத் தொண்டைப்புண்ணல் நனி வருந்திக்கொண்டிருந்த போது, ஒரு கிண்ணம் சவ்வரிசிக் கஞ்சியையும் பருக இயலாது துடித்த காலத்து, "ஒரு மனிதனுக்கேனும் உதவி புரிய இயலுமாயின், ஆயிரம் பிறவிகளிலும் சவ்வரிசிக் கஞ்சியை மட்டும் குடித்து உயிர் வாழ்ந்திருக்க எத்துணை (எவ்வளவு) மகிழ்ச்சி கொள்வேன்!" என்று இயம்பினர். துயரமயமான அஞ்ஞானக் கடலில் அழுந்திக் கிடக்கும் உலக மக்களின் மீது அவர்க்கிருந்த பரந்த வான் கருணையின் பெருக்கை இவ் வாய்மொழி பறை சாற்றி அறிவுறுத்துகின்றது. அவரது சாதன வாழ்க்கை முற்றுப் பெற்றதும், அனுபூதிக்கனி முதிர்ந்து பழுத்ததும், மன்னுயிர்குப் பணிசெய்யும் அவா திடீரென அவர்பாற் கொழுந்துவிட்டெரியத் தொடங்கிற்று. மரம் பழுத்தால் வெளவாலை வாவென்றழைப்பார் ஒருவருமில்லை ; நறுமலர் விரிந்ததும் வண்டுகளை விளிப்பதில்லை; எனினும் மெய்யடியார் தம்மை நாடிவரும் காட்சியைத் தேவியே காட்டியருள, முன் பொருகால் தேவியைக் காண அல்லும் பகலும் துடித்தது போன்று அம்மெய்யடியாரைக் காணுமாறு அனவரதமும் தவித்துக் கொண்டிருந்தார். 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை வளரும் இந்நோய்' என்ற கூற்று (வார்த்தை) அவர் மாட்டும் உண்மையாயிறறு. மடியிலே பால் சுரந்ததும் கன்றை நினைந்து கதறும் பசுப்போல, அவரும் காதலாகிக் கசிந்து 'அடியாரே வாருங்கள்' என்று கூவியழைக்கலானர். அன்று முதலே அவர் தம்மைத் தெய்வ அருள் வெள்ளம் பெருகுதற்கேற்ற பெருமடையாக்க முயன்று, தற்போதத்தை அறவே ஒழித்து வந்தார் ; சாதாரண உணர்வு நிலையிற் சஞ்சரிக்கும்போது தனி மனிதரைப் போன்ற பாவனையை உணரினும், தெய்விகப் பேரன்பெனும் ஆழியிலே மிதக்கும் துரும்பெனவே தமது வாழ்க்கை அமைந்ததை நன்குணரலானர். ஞானப் பணி புரிந்தாலன்றி ஆறியிராத அப்பேரன்பின் துடிப்பு இன்றைக்கும் ஞானமுடையார்க்கெல்லாம் பயனை நல்கும் தன்மையதா

யுள்ளது; அப்பேரன்புக் கடலோடு நம் உள்ளத்தை இணைத்துக் கொள்வதொன்றே வேண்டியதாகின்றது.

எண்ணிறந்த ஞானியர் இவ்வுலகில் தோன்றி மெய்ந்நெறியைப் பின்பற்றி மெய் யுணர்வெய்தி அமர நன்னிலை (இறவாத நிலை, மீண்டும் பிறவாத நிலை) யில் வாழ்ந்துள்ளனர்; சமய குரவர்கள் பரம்பொருளை அடையப் பற்பல நெறிகளைக் காலத்திற்கேற்பத் தமது வாழ்வாலும் போதனையாலும் வகுத்தருளி யுள்ளனர். ஆயினும் சமயக்கொள்கை கட் கும் சாதனங்கட்கும் அதீதமான சமயாதீ தப் பரம்பொருள் ஒன்றே யென்பதையும், மக்கள் அனைவரும் ஒரே இனத்தவர் என்ப தையும் மக்கள் மறந்தவராயினர். சமயங் கள் மக்கட்குள் பிரிவுகளை ஏற்படுத்தி வேற் றுமையுணர்ச்சியை விளைவிக்க ஏதுவாயின. தற்கால உலகமோ, அனைவரும் ஒன்றுகூடி ஒருமையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி வருகி றது. 'ஒன்றே குலம், ஒன்றே தெய்வம், ஒன்றே சமயநெறி, ஒன்றே வாழ்வின் மெய்ப்பயன்' என்ற பரந்த பேருண்மைகளை அறிவாலன்றி அனுபூதியால் நிலை நாட்டும் மாபெரும் குரவரை உலகம் அவாவி நின் றது. அவ் அவாவினை நிறைவேற்றும் பொருட்டே ஒருவரே ஐயாயிரம் ஆண்டுக ளாக இந்தியாவில் தொகுத்து வைத்திருந்த ஞான அனுபூதிச் செல்வத்தை யெல்லாம் ஐம்பதாண்டிற்குள்ளே தமது வாழ்க்கையில் சாதனம் பயின்று பெற்று, 'உள்ளது ஒன்று உரவோர் விள்ளுவ பலவா' (ஸத்தான பொருள் ஒன்றே, அதனை யுணர்ந்தவர் அத னைப் பற்றிப் பலவாறு பேசுவர்) என்பதைப் பரந்த ஆழ்ந்த அனுபூதியால் நிலை நாட்டினர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். சமயச் சார்பே அனைத்தி லும் மிக ஆழ்ந்ததும் மிக்க சக்திவாய்ந்தது மாதலின், சமயம் ஒன்றே என்பதை மெய்ப் பித்தல் காரணமாக 'ஒன்றே குலம்' எனும் உணர்ச்சியை எழுப்புதற்கு இன்றியமை யாத உறுதியான அடிப்படையை அவர் அமைக்கலானார். உலக ஒற்றுமையை ஈனும் இவ்வித்தின் மேன்மையினை இனி வருங் காலமே நிரூபிக்க வேண்டியதாகும்; எனி னும், உலகமக்கள் அனைவரும் ஒரு குலத்தி னரே என்ற உண்மையை உணர்தல் தற்கால மனிதனுக்கு எந்நாட்டிலும் மிகமிக அவசிய மாகின்றது என்பதை எவரும் மறுக்க முடி யாது.

சமய சமரச உணர்ச்சியின் வாயிலாக உலக மனிதர்க்குள் சமரச மனப்பான் மையை ஊட்டும் தெய்விகத் திருப்பணியில் நம் பரதமா நாட்டுக்கு ஒரு பெரும் பொறுப் புண்டு. தனக்கென வாழாது பிறர்க்கென (மன்னுயிர்க்கென) வாழும் பெருந்தகை மையை—ஒரு நாடு தனது நலனுக்கென வாழாது உலக நலனுக்காக வாழும் ஒப்பற்ற மேன்மையை-உலகத்தார் உணருதற்கு ஓர் எடுத்துக்காட்டாக (உதாரணமாக) அமைய வேண்டியது நமது நாடு. உலகத்தே தோன்றி யுள்ள உயிர்கள் அனைத்தும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறொன்றை அறியாத, வேறு இலக்ஷியத்தை விரும்பாத நாடாயிற்று இது. தனது முன்னேற்றத்திற் காகப் பிறரது முன்னேற்றத்தைத் தடுக்கும் நோக்கத்தை இழிவாகக் கருதிய இந் நாட் டிலே தேசாபிமானம் உலகத்தார்க்குத் தொண்டு செய்யும் முயற்சிக்குப் பிறப்பிடமும் தொடங்குமிடமுமே ஆயிற்று. இந்நாடு தன்னைத் திருத்தியமைத் துக்கொள்ள முயல்வதும், உயர்ந்த பேற்றை நாடுவதும், பேரானந்த வெள்ளத்தை உலகெ லாம் பாய்ச்சும் உத்தம நோக்கத்தோடு தான். ஆதலின் இன்று நம் நாடு செய்தற்க ரிய அரும்பணியாவது, தன் அருந்தவப் புதல் வர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது தனி வாழ்க்கை யில் செய்து முடித்த ஒரு காரியத்தைத் தனது சமூக வாழ்க்கையிலே இயற்றிக் காட் டுவதே யாகும்; அதாவது, உலக முழுவதற் கும் சமயசமரசத் தன்மையை விளக்கிக் காட்டும் ஒரு மாதிரிப் பொருளாக அமைதலேயாம். இப்பணியை நிறைவேற் றும் முயற்சியில் ஈடுபடும்போதே தேசீய ஒற்றுமையையும் உணர்ச்சியையும் அவ் வழியே உண்டாக்கியும் வளர்த்தும் நிலை பெறுத்தியும் வரல் வேண்டும். ஆக ஸ்ரீ ராம கிருஷ்ணரது வாழ்க்கை தற்காலத்தே நமக்கு உயர்ந்த தேசீய உணர்ச்சியெனும் விளக்கிற் குத் தூண்டு கோலாகிறது; நமது தேசீய வாழ்க்கையில் சமயசமரசத்தை நிலைநாட்டி, அதன் மூலம் மனித சமரசப்பேற்றை அடை தற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகிறது. இப் பலகணி வழியாகவும் அவரது பெருமை காணக்கிடக்கின்றது.

'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை' என்றார் இறைவனைப் பற்றிச் சம்பந்தப் பெரு மான்; அதுபோன்றே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மை அடைந்தவரை ஆட்கொண்ட பான் மையும் அதற்குக் காரணமாயமைந்த பண்பும் ஒன்றையொன்று ஒவ்வாத பலவகை யாக விளங்கி, அவரது எண்ணரும் குணத்தையும்

எண்ணத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்தினவாயின. உலகம் பலவிதம் எனும் பழமொழிக்கு இணங்க, ஞானதாகத்தோடு தம்மை நாடித் தமது குறைகளை முறையிடும்போது, அம்மாகுரவர் அவரவரது முறையீடுகளின் மூலகாரணத்தை ஞானக் கண்ணால் நோக்கி உள்ளவாறு அறிந்து, அதை நீக்குதற்குரிய முறையை அருளுவார். ஒருவர்க்கு அருளும் முறை மற்றொருவர்க்கு அதே முறையீடு செய்யும் சமயத்து அருளும் முறையினும் வேறுபடுவதுண்டு. பலப் பல முறைகளைப் பலப்பல மனிதர்களிடம் அவர் கையாண்ட திறன் வியக்கத்தக்கதே யாகும். சமயம் என்பது ஒரு மனிதன் முத்திநோக்கிச் செலுத்தும் நெறியாயின், மனிதர்களின் வேறுபாடுகட்கேற்பச் சமயங்களும் வேறுபடுதல் இயல்பே யன்றோ? மனிதர்களுள் ஒருவரை முற்றிலும் ஒத்த வேறொருவர் இல்லையாதலின், ஒருவர்க்கு வேண்டிய சமயநெறியும் பிறிதொருவர்க்கு வேண்டிய சமயநெறியும் ஒன்றாவதில்லை. இதனால் எத்தனை மனிதரோ அத்தனை சமயங்கள் என்பர் குருதேவர். மனித கோடிகள் உலகினில் அமைந்தவாறு போன்றே சமய கோடிகளும் ஏற்பட்டுள. "உடல் அனந்தம், செயும் வினை அனந்தம், கருத்தோ அனந்தம், பெற்றபேர் சீர் அனந்தம் சொர்க்க நரகமும் அனந்தம் நற்றெய்வமும் அனந்த பேதம், திகழ்கின்ற சமயமும் அனந்தம்" என்பதே உண்மை. இவ்வாறு சமயங்கள் அனந்தமாயினும், 'பேர் அனந்தம் பேசி மறை அனந்தம் சொலும்' 'பேசரும் (சொல்லற்கு அரிய) அனந்த பதம்' ஆன பெரிய மோன நிலையெனும் கடலில் முடிவிற் போய்ச் சேரும் நதித்திரள் போன்றன சமயங்களெல்லாம் என்பதே முடிபு. உலகிலே இப்போது நிலவும் சமயங்கள் சிலவற்றின் சமரசம் மட்டுமன்றி, இதுவரை தோன்றியுள்ள சமயங்களும் இனித் தோன்றும் சமயங்களும் ஆகிய அனைத்தின் சமரசமும் இம்முடிவில் அடங்கிவிடுகின்றது. இம்முடிபினை அறிவால் ஒப்புக் கொள்வதோடு நின்றுவிடாது, அனுபவத்திலும் அடியார்க்கு அருள்புரிந்த வகையிலும், நிலைநாட்டிக் காட்டியதே ஸ்ரீ ராமகிருஷ்ணரது முடிவற்ற ஞானசக்திகட்குச் சான்று பகர்கின்றது.

அவர் மக்கள்பாற் செலுத்திய அன்பிலும் ஓர் இணையற்ற தன்மை மிளிர்ந்தது. ஒவ்வொருவரும் தம்மிடம் அவர் செலுத்திய அன்பின் ஆழத்தையும் சிறப்பு வகையையும் நுகர்ந்தபோது, அத்தகைய அன்புப் பெருக்கைத் தம்மிடம் சிறப்பாக அன்பு கொள்வதாகக் கருதும் பெற்றோரும் செலுத்தினரல்லர் என்றே உணர்வாராயினர். தம்மிடத்தே மட்டும் அவ்வளவு மிக்க அன்பினை விசேஷமாகச் செலுத்தினர் என்றே ஒவ்வொருவரும் எண்ணலானர். தம் உள்ளமாகிய பேரூற்றினின்றும் பெருகும் தூய அன்புவெள்ளத்தை ஒரு மடை செய்து ஒவ்வொருவரிடத்தும் பெருக்கினர் குருதேவர்; ஆயினும் எவர்பாலும் இறையேனும் (சிறிதேனும்) பற்றற்ற தூய பான்மையராயினர். சாதாரண மக்களது அன்பு தம்மோடு உறவான ஒரு சிலரிடத்துத் தடையின்றிப் பாயும்போது, அதே யளவிற்குப் பிறரிடத்துப் பெருகும் பண்பை இழப்பதாகின்றது. மனித அன்பிற் சிறப்புத்தன்மை மிகும்போது பொதுமை குறைய, பொதுமை மிகும்போது சிறப்புத்தன்மை குறைகின்றது. பற்று காரணமாக அன்பு வெள்ளம் ஒரு சிலரிடம் பெருகும்போது ஏனையோரிடத்துப் பற்று எழுதற்கு வகையின்மையால் அன்புவளம் சுருங்குகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணரது அன்பு உண்மையாகவே காரணம் பற்றாது எழும் பேரருளாதலின், அது தங்கு தடையின்றி எவரிடத்தும்-உற்றாராயினும் மற்றாராயினும் —பெருகுகின்றது. மனிதத்தன்மை தேய்ந்து மாய்ந்து தெய்வத் தன்மையே தலையெடுக்கப்பெற்றஅவரிடத்து இறையருளே, வேண்டுதல் வேண்டாமை எனும் வேறுபாடின்றித் தனி வகையிலும் பொதுவாகவும் (ஒருவரிடத்தே மட்டும் பெரும்பற்று உள்ளது போலும், யாதொரு பற்றும் இல்லாமலும்) பெருகுவதாயிற்று. அவரது அன்பைப் பெற்றார் ஒவ்வொருவரும் மனித அன்பின் வேறுபாட்டு நயத்தையும் தெய்வ அருளின் பொது நலனையும் துய்ப்பார். உதாரணமாக, அவர் தமது பத்தினியாராகிய சாரதா தேவியாரிடத்துச் செலுத்திய அன்பில், ஒரு கணவன் தனது அன்பிற்கினிய காதலரிடத்துச் செலுத்தும் சிறப்பு நலன் முழுதும் காணப்பட்டதெனினும் அவரைத் தெய்வமாக உணர்ந்து அவர்பாற் பெருகிய பக்தியும் அதனோடு இரண்டறக் கலந்திருந்தது; அத்தகைய அன்பை மனித அன்பாக மாறிய தெய்விக அன்புதானோ, தெய்விக அன்பாகத் திருந்திய மனித அன்புதானோ அதனை அறிவார் யாரே? இதிலும் அவரது வாழ்க்கை அற்புதமாகவே பொலிகின்றது.

இன்னும், அவர் தமது மனத்தை அடக்கியாண்ட மாண்பும் ஈடற்றதாகின்றது; அதிலும் தெய்வத் தன்மையின் மணம் கமழ்கின்றது. 'எண்ணிய எண்ணியாங்கு எய்தவர் எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்

பது பொய்யாமொழி (திருக்குறள்). அவரது நினைப்பின் (பாவனையின்) அளப்பரிய திண்மையால், நினைத்ததை நினைத்தவாறே பெறுவார். தம்மை அநுமனாகக் கருதுவராயின், அப்பாவனை முதிர்ந்து மனத்தை அக்கருத்தின் வடிவமாக்கும்; அவருடைய நினைவு சொற் செயல்கள் அநுமனுக்குரியனவாகவே அமையும். பாவித்த பொருளோடு தாம் ஒன்றித்து விடுவாராதலின், உடலும் பாவனைக்கு இயைந்த வழியே மாறிவிடும். ஒரு பாவனையை அவர் தமது உள்ளத்துப் புகுத்தி நிலைநாட்டும் போது, அது வொழிந்த வேறொரு பாவனை குறுக்கிடாது; முழுமனமும் முதல் முதலாக ஒரு பாவனைக்கு வசப்படுவது போன்றே உருப்பெறும். அப்பாவனை கல்லின் மேற் பொறித்த எழுத்தைப் போல் உள்ளத்தே ஊறி அழுந்திப்பதிந்திருப்பினும், மற்றொரு பாவனை வரும்போது முன்னது இல்லாதது போலவே ஆகிவிடும். ஈரக் களிமண்ணைப் போன்று தம் மனத்தை நினைத்தவண்ணம் உருட்டுவார் ஒரு சமயம்; ஒரு வடிவத்தை அமைத்தபின் அதை அழித்து வேறொரு வடிவத்தை அமைப்பார்; ஆயினும் ஒவ்வொரு வடிவத்தின் பயனும் உள்ளத்தின்கண் எங்கோ அறியாது பதிந்தும் இருக்கும். நினைத்தபோது புதிய பழக்கத்தை மனதிற்கு ஊட்டுவார்; நினைத்தபோது அதனை அழித்தும் விடுவார். தம் உள்ளத்தை ஆட்டுவிப்பது போன்றே பிறரது உள்ளத்தையும் நினைத்த வண்ணம் ஆட்டுவிப்பர்; பிறரைத் தமது இச்சையால் சமாதியிற் புகுத்துவார், சமாதியினின்றும் வெளியேற்றுவார். ஆன்மா அல்லாத பிரகிருதி முழுவதும் - தம் அகத்தேயாயினும் புறத்தேயாயினும்-அவர் வசப்பட்டு நிற்கும். அவரது ஆன்மா உடலிற் பிரகிருதியோடு தொடர்புற்றிருப்பினும், உண்மையிலே தொடர்பற்று நிற்கும். தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற' பரஞ்சுடராய அவரது மாட்சியையோ, தமது மனத்தை அடக்கியாண்ட ஆட்சித்திறனையோ சிந்தித்துப் பார்க்கின், அது சிந்தனைக் கெட்டாத அற்புதம் என்பது தெளிவாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு உலகமெங்கும் ஞானவறட்சி உண்டாகி, மக்களின் மனம் கள்ளியும் கற்றாழையும் தழைக்கும் பாலைவனமாயிருந்தது. விஞ்ஞான (பௌதிக ஞான) சூரியன் மேற்றிசையிலே உதித்துக் கீழ்த்திசையை நோக்கி வரவும், அஞ்ஞான இருள் எங்கும் செறியலாயிற்று. நிலையான ஆன்மப் பொருளின் "உலவா இன்பச் சுட" ராய பரிதியின் ஒளியினை விடுத்து, நிலையற்ற அறிவொளியிலும் விஞ்ஞான விளக்கொளியிலும் மனமகிழ்ந்து சிற்றின்பத் தேட்டத்திற்கு ஆளாயினர் மாந்தர். உண்டும் உடுத்தும் ஊன்வளர்த்தும் இனம் பெருக்கியும் வாழும் இம்மை வாழ்விற் கொண்ட மோகத்தால் அவ்வாழ்வின் வளத்திலே கண்ணும் கருத்துமாகி, நாம் உள்ளொளியைச் சுருக்கி, அதன் இருப்பினையும் மறக்கவும் மறுக்கவும் தலைப்பட்டோம். நாம் தேடிய அழியாப் பெரு வாழ்வாவது, மனித இனத்தாரின் சமூக வாழ்வே; ஐம்புல இன்பவாழ்க்கையில் மனித இனமுன்னேற்றமே நமது கூக்குரலும் நமது இலக்ஷியமும் ஆயிற்று; அதனை அடைதற்குத் தேசிய உணர்ச்சியே வழியானது. இதனால் நாத்திக வாதமும் ஓங்கலாயிற்று. மக்களது வாழ்க்கையில் அடைதற்குரிய உறுதிப் பொருள்களுள் முத்தியே உயர்வற உயர்ந்ததென்பதை மறந்த மக்கட்கு நினைவூட்ட ஞானப்பேரலையொன்று எழ வேண்டியதாயிற்று. அஞ்ஞான இருளை ஒழிக்க மெய்ஞ்ஞான சூரியன் கிழக்கே உதிக்க வேண்டியதாயிற்று. ஞானப் பேரொளியான மின்னலைச் சொரிந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர்; அந்த ஞான ஒளி மயமான செய்தியை மேலை நாடுகளிலே இடியென முழங்கியவர் ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர். உலகமுழுவதும் பரந்திருந்த ஒரு தேவைக்கு ஏற்றவாறு அவ்வொளி அமைந்தது; எவ்வாறெனில், உலகத்தில் வழங்கி வரும் மதங்களின் சாரமான உயர்ந்த அம்சம் ஒவ்வொன்றும் நேர் காட்சியால் மெய்ப்பிக்கப் படலாயிற்று; 'ஒன்றே மதம்' என்ற பேருண்மை அறிவுக்காட்சியாலோ தயவாலோ ஒப்புக் கொள்ளப் படாது, அநுபவத்தாலும் வாழ்க்கையாலும் நிலைநாட்டப் பட்டது. இதுவரை மனிதர் கண்டிராத தெய்வத்தன்மையின் சிகரத்தினின்றும் கிளம்பிய இச்சமய சமரச வாழ்வு தக்ஷிணேசுவரத்திலே வெளியிடப்பட்டது. ஞான உலகத்திலே கொள்கைகளால் மட்டும் யாதும் பரவுவதில்லை; வாழ்வாகிய சுடரைக் கொளுத்துவதற்கு வாழ்வே வேண்டியதாகும். மனிதவாழ்விற் கண்ட மெய்ஞ்ஞானம் முழுதும், மத ஒருமையெனும் பேருண்மையும் ஒருவரது அநுபூதியிலே விளங்க வேண்டியிருந்தது. உலகத்தை உய்விக்கும் அந்த உண்மை ஒருவரது வாழ்விலே விளங்கியதே, பல நூற்றாண்டுகளிலே மனிதன் அடைந்த பேறுகளில் மிகவுயர்ந்த அற்புதப் பேறு ஆகும்.

மக்கள் தமது கண்முன் கண்ட அவ்வாழ்க்கையை என்னென்பது! அது வருணனைக்கு

அப்பாலானது, மனம் வாக்குகட்கு எட்டாதது. "ஒரு வாழ்விலே பெற்ற எண்ணரிய ஞானப் பூரணமும், அந்தமிலா ஞான பாவனைகளும், பேரின்பப் பரவச நிலைகளின் ஆழமும் வகைகளும், மன்னுயிரைத் தன்மாட்டு இழுத்து உய்விக்கும் திறனின் பேரகலமும், எம்மதத்தராயினும் எக்கொள்கையாராயினும் அனைவர் மீதும் ஒக்கப்பாயும் பேராதரமும், ஞானப் பேறுகளின் வகைகள் அனைத்தையும்ஒரு நர வடிவத்திலே இணைத்து வைத்திருக்கும் அற்புதமும், அவரது மொழி ஒவ்வொன்றிலும் செயல் ஒவ்வொன்றிலும் ஸகுணத் தன்மையும் நிர்க்குணத் தன்மையும் கலந்து நின்ற ஆச்சரியமும், மிகவுயர்ந்த உண்மையை மிக எளிய உள்ளத்திற்கும் விளங்குமாறு செய்யும் தெய்விகச் சாதுரியமும், அளப்பரிய அன்பும், அளப்பரிய மன்னிப்புக் குணமும், எந்நாட்டினனுயினும் எக் கொள்கையினனுயினும் ஒவ்வோர் உயிர்க்கும் உறுதுணையாகப் பக்கத்து நிற்கத் தயாராகவிருக்கும் தனிப் பான்மையும்— இவையனைய அழியாத உண்மை நிகழ்ச்சிகள் யாவும் மக்கட்குல முழுதும் பெறப் பேரவாவொடு துடித்துக் கொண்டிருக்கும் பொருள்களாகிய ஒளியையும் சாந்தியையும் நாடுதற்குரிய வழியைக் காட்டும் கழிபெருந் தெய்வ சக்திக்கு அறிகுறிகளாகும். இவ்வுண்மைகள் யாவும் முழு மனதோடு ஒவ்வொருவம் படித்து அறியவேண்டியவையாகும்." ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு நரவடிவமல்லர், மெய்யான தத்துவமே; ஒரு நிலையினின்றும் மற்ஞெரு நிலையினை அடைந்தவரல்லர்; என்றென்றும் மாருத நிலையிலுள்ள உண்மையாயிருப்பவரே; உலகமுழுதையும் ஆட்டிவைக்கும் ஞானப் பெருக்கே அவர். தமது சக்தியை வெளிப்படுத்தவும் தொழிற் படுத்தவும் உதவும் வாயில்களை அவர் தாமே உண்டாக்கிக் கொள்வார்; தமக்குரிய கருவிகளை எங்கேனும் எவ்வழியிலேனும் தாம் விரும்பியவாறே பயன்படுத்திக்கொள்வார்; இக்கருவிகளும் அவரை அறியமாட்டா. அச்சக்தி உலகத்தே இயற்றிவரும் தொழிலை உள்ளத்துக் காணப் பெற்றவன் பாக்கியவானேயாவான்; அதற்கு உணர்வோடு கருவியாகத் தம்மை ஆக்கியமைத்துக்கொள்பவன் அவனினும் பாக்கியவானே. இப்பாக்கியத்தையும் அதன் பயனையும் மக்களிற் பல்லோர் உணர்ந்து உய்வடைவாராக!

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B. A.

அத்யாயம் 8

இறைவனுடன் அளவளாவல்

இறைவன் நம்முடன் இருக்கும்போது அனைத்தும் நலமாக இருக்கும்; எதுவும் அரிதாகத் தோன்றுவது இல்லை. ஆனல் இறைவன் நம்முடன் இல்லாத போது ஒவ்வொன்றும் மிகக் கஷ்டமாக ஆகிவிடுகிறது.

இறைவன் உள்ளேநம்மோடுஉரையாடாத போது வேறு எவ்விதத் தேறுதலும் பயனற்றதாகி விடுகிறது. ஆனல் இறைவனது மொழி ஒன்றுமட்டும் நம் செவிப்பட்டாலும் மிகவும் பெரிய ஆறுதல் அடைவதை உணர்கிறோம்.

மேரி மெகதலீன் என்பவள் தான் அழுதுகொண்டிருந்தபோது 'ஏசுநாதர் புத்துயிர் பெற்று எழுந்து அழைக்கிருர்' என்பது செவிப்பட்டதும் அவ்விடத்தைவிட்டு எழுந்து ஓடிவந்தாள்.

ஆ! இறை அருளற்று ஏங்கிக் கண்ணீர் வடிக்கும் நிலையில் இருந்து, ஆன்மீக இன்பத்தைத்தர இறைவன் அழைக்கும் நேரம் மிகப் பேரின்பமான காலம்!

இறைவனேடு நீ இல்லாத போது உன்னிடம் எத்தனை நெஞ்சு வறட்சியும் கடிய மனமும் இருக்கின்றது! இறைவனேடு இருப்பதை விட்டு வேறென்றை விரும்புவது எவ்வளவு வீணனதும் மூடத்தனமும் ஆகும்?

இறைவனை இழத்தல் என்பது இவ்வுலக முழுவதையுமே இழத்தலைவிட மிகப் பெரிய நஷ்டம் அன்ரோ!

2. இறைவனைவிட்டு இவ்வுலகம் உனக்கு எந் நலத்தை நல்கப் போகிறது?

இறைவனின்றி இருத்தலே கொடும் நிரயத்துள் இருப்பதாம். இறைவனேடு இருத்தலே இன்ப விண்ணுலகில் இருப்பதாகும்.

இறைவன் உன்னுடன் இருப்பானுகில் எந்த எதிரியும் உன்னைத் துன்புறுத்த முடியாது.

இறைவனைக் காண்பவன் நல்ல நிதியத்தைக் காண்பவனாவான்; அது நல்லவை அனைத்திலும் மேலான திவ்விய நலனேயாகும்.

இறைவனை இழப்பவன் மிகப் பெரு நலத்தை இழக்கிறான். உலக முழுவதையுமே இழப்பதைவிட மிகப் பெரிய நஷ்டமாம் அது.

இறைவனைப் பிரிந்து வாழ்பவன் வறிஞனாவான், இறைவனுடன் பிரியாது இருப்பவன் மிகப் பெருஞ் செல்வவந்தனாவான்.

3. இறைவனோடு உரையாடும் முறையை அறிதல் மிக அரிய வித்தையாம்; இறைவனை இழக்காது போற்றும் வழியை அறிதல் சீரிய அறிவுடைமையாகும்.

நீ அடக்கம் உள்ளவனாகவும் அமைதி உடனும் இரு. இறைவன் உன்னுடன் இருப்பான்.

அமைதி உடனும், ஆன்மீக ஆர்வத்துடனும் இரு. இறைவன் உன்னுடன் தங்கி இருப்பான்.

வெளி உலக விஷயங்களில் உள்ள மன ஈடுபாட்டால் நெறி விலகியவனாவையேல் வெகுவிரைவில் இறைவனை உன்னிடம் இருந்து துரத்தி விடலாம்; அவனது திருவருளையும் இழந்துவிடலாம்.

அப்படி இறைவனைத் துரத்திவிட்டு அவனை இழப்பாயானால் எவரிடம் ஓடி அடைக்கலம் புகுவாய்? யாரை உனது உற்ற நண்பனாகத் தேடிப்பிடிப்பாய்?

உற்ற நண்பன் இன்றி இன்பமாக உன்னால் வாழ முடியாது. அதுவும் அனைவருக்கும் மேலாக இறைவன் உனது உற்ற நண்பனாக இல்லாவிடில் நீ உண்மையில் துயருற்றுப் பாழடைவாய்.

ஆதலால் இறைவனைவிட்டு வேறு எவனையேனும் நம்பி மகிழ்ந்தாயானால் நீ பேதையைப்போல் நடப்பவனாவாய்.

உலக முழுவதுமே நமக்கு எதிராக நிற்கும் நிலை ஏற்படல் கூட, இறைவன் நம்மால் மன வருத்தமடையும் நிலையை விட நல்லது என அறிக.

நமக்கு விருப்பமானவற்றுள் எல்லாம் மிக மேலானதாக இறைவனே நமது சிறப்பான அன்புக்கு உரியவனாகட்டும்.

4. அனைவரையும் அனைத்தையும் இறைவனுக்காக நேசி; ஆனால் இறைவனிடம் அவனுக்காகவே அன்பு செலுத்து.

இறைவனையே தனிப் பேரன்புடன் விரும்பு. அவனே நண்பர் அனைவருக்கும் மேலாக நலனும் நன்றியும் வாய்ந்தவனாவான்.

இறைவனுக்காகவும், அவனுக்குள்ளும், நண்பர்களும் எதிரிகளும் சமமாக உனக்குப் பிரியமானவர்களாகட்டும். அவ்விறைவனை அறிந்து அவனிடம் அவர்கள் அனைவரும் அன்பு செலுத்தும்படி அவர்கள் அனைவருக்காகவும் இறைவனை நீ பிரார்த்தித்தல் வேண்டும்.

தனிச் சிறப்பாகப் புகழப்படவோ அன்பு செலுத்தப் படவோ நீ ஒரு போதும் விரும்பாதே; அப்படிப் புகழும் அன்பும் பெறல் தனக்கிணையாகப் பிறிதொன்று இல்லாத இறைவனுக்கே உரிமையாகும்.

மற்றும் எவரேனும் உன்பால் முழு மனதையும் வைத்து அன்பு செலுத்த வேண்டும் என்று விழையாதே. நீயும் எவர் அன்பின் மேலும் உன் மனத்தை வையாதே; இறைவன் ஒருவனே உன்னுள் இருக்கட்டும். ஒவ்வொரு நல்லோனிடமும் அப்படியே இறைவன் மட்டும் இருக்கட்டும்.

உள்ளத் தூய்மையுடனும் பற்றற்ற மனத்துடனும் இரு. எப்பொருளிடத்தும், எவ்வுயிரிடத்தும் உள்ளத்தைச் சிக்க வைத்துக் கொள்ளாதே.

இறைவன் தன்னை நச்சினார்க்கு எத்துணை இனியன் என்பதைச் தடையின்றிக் கருதவும் காணவும் விரும்பினால், இறைவன் முன்பு, உள்ளதை உள்ளவாறு ஒளியாது திறந்து காட்டும் தன்மையனாகி, உள்ளத்தைத் தூய நிலையில் வைத்து அவனை அணுகுக.

இறையருள் உன்னைத் தடுத்தாட் கொண்டு தன்பால் இழுத்துக் கொண்டாலன்றி, அவனோடுமட்டும் நீ தனியாக ஒன்றியிருக்கும் பொருட்டு அனைத்தையும் விட்டுப் பிரிந்து துறத்தலாய அப்பரம இன்பத்தை நீ ஒருக்காலும் பெறமாட்டாய்.

இறைவன் அருள் ஒருவற்கு வரும்போது தான், ஒரு மனிதன் அனைத்தையும் இயற்றும் திறன் எய்துகிறான். அவ்விறையருள் நீங்கும் போது அவன் ஆற்றல் அற்ற வறிஞன் ஆகிறான், இறைவனது சாட்டையடிக்கும்

தண்டனைக்கும் மட்டும் தனியாக ஒதுக்கப்பட்டவன் போல் ஆகிறான்.

அங்கிலே பெற்றால் நீ மனம் சோர்ந்துவிடக் கூடாது. நம்பிக்கையை இழந்துவிடவும் கூடாது. 'இறைவன் திருவுளப்படி, என்று திடமாகத் தூய்மையில் நிற்றல் வேண்டும்; உனக்கு என்ன நேர்ந்தாலும், இறைவனது பெருமைக்காகப் பொறுமையுடன் அதை ஏற்க வேண்டும். ஏனெனில் கடுங்குளிர் காலத்திற்குப்பின் கோடை காலம் வருகிறது; இரவிற்குப்பின் பகல் திரும்பியும் வருகிறது; புயலுக்குப்பின் பேரமைதியும் நிலவுகிறது.

இந்துமத ஸாரம்

(55-ம் பக்கத் தொடர்ச்சி)

அசையும் படத்திரையின் மீது காணப்படும் பற்பல பொருள்களும் எதனால் ஆக்கப்பட்டுள்ளன? அவையனைத்தும் ஒளியால் ஆக்கப்பட்டுள்ளன. படத்திரையின் மீது நாம் காணும் நீர், தீ, நிலம், செடிகள், ஓட்டுங் கருவிகள், உயிருள்ள பொருள்கள் முதலிய யாவும் ஒளியால், ஒளியொன்றாலே ஆக்கப்பட்டுள்ளன. ஒளியும் அதனின்றும் வேறுபட்ட இருளும், அதாவது ஒளியின்மையும், முழு மாயத்தையும் தோற்றுவிக்கின்றன. அசையும் படக் கருவியில் பட ஏட்டிற்குப் பின்னுள்ள ஒளியோ வடிவற்ற ஒரே பிரகாசப் பெருக்கேயாகும். பட ஏடு அங்கு இல்லாவிடின், ஒரு தன்மையான பிரகாசம் வாய்ந்த திரையையன்றி வேறொன்றையும் காணமாட்டோம்; பட ஏட்டை நீக்கிவிடும் போது நாம் உண்மையாகப் பார்ப்பதும் அதுவன்றோ? ஒளி தாராளமாகச் செல்வதற்குப் பட ஏடு இடந்தருவதில்லை; சில பகுதிகட்குச் செல்ல இடந்தந்து, மற்றப் பகுதிகளைத் தடுத்துவிடுகிறது. படஏட்டில் ஏற்படும் இத்தடையே இருட்டுப்பகுதிகட்குக் காரணமாகிறது; இவ் இருட் பகுதிகளின் வரையறைக்கு உட்பட்டுத் திரையின் மீது விழும் ஒளி ஏராளமான பலவகைப்பட்ட பொருள்களாகத் தோன்றுகிறது. மேலும், திரையின்மீது விழும் படங்களின் அசைவாகிய மாயம் ஒளியின் அசைவு காரணமாக எழுவதேயன்று. படஏட்டின் அசைவால் உண்டாகும் இருட்பகுதிகளின் புதிய ஒழுங்கு வகையால் மட்டும் அது ஏற்படுகின்றது. படஏடு அசையும்போது, அதன் வழியாகப் பாயும் ஒளிக்குப் புதுப்புது வழிகளில் தடை ஏற்படுகின்றது. ஒளி ஒரே மாதிரியாய் உள்ளது, இருட்பகுதிகள் காணுந் தோறும் மாறி வருகின்றன; படத்திரையின் மீது காட்சிகள் அசைவதாகத் தோன்றும் பொய்க்காட்சிக்கு ஏது இவ்வளவேயன்றி, வேறில்லை.

இவ்வுலகப் பொய்க்காட்சியும் கிட்டத்தட்ட இதுபோன்றே உண்டாக்கப் படுகின்றது. ஈசன் அசையும் படக்கருவியின் ஒளியைப் போன்றுளான். மாயை அசையும்பட ஏட்டைப் போன்றது. மாயை வழியாக நோக்கும்போது, ஈசன் நாம உருவங்களாகிய எண்ணிறந்த இருட்பகுதிகளால் பல்வகைப் படுவது போலவும் தூலப் பொருளாவது போலவும் தோன்றுகிறான்; ஆனால் உண்மையில் ஈசன் யாதொரு மாறுபாடும் அடைவதில்லை. அசையும் படஉவமையில் படத்திரையே ஒளி மயமாயிருந்திருப்பின், அதற்குள்ளேயே இருட்பகுதிகளால் தன்னைப் பலவாறாக வேறுபடுத்திக் கொள்ளும் திறமை இருந்திருப்பின், உவமை முற்றும் பொருத்தமானதாகும். ஏனெனில் ஈசன் தன்னையே ஆதாரப் பொருளாகக் கொண்டு, தனது சக்தியாகிய மாயையால் தன் மீதே பிரபஞ்சமெனும் பொய்க்காட்சியைத் தோற்றுவிக்கிறான். மாயை ஈசனது உண்மையை மறைத்து, ஈசனையே இவ்வுலகமாகத் தோற்றுவிக்கிறது; நாம உருவங்களில் வரம்பு கடந்த பலவகைகளை உண்டாக்குவதனாலே இது எளிதாக நிகழ்கின்றது. படத்திரையிலுள்ள இருட்பகுதிகளைப் போன்றே நாம உருவங்களும் பொருள்களல்ல.

அதே உவமையை இன்னும் சிறிது தூரம் வரை விரிப்போம். படம் பார்க்க வருபவர்களில் யாரேனும் திரைமீதுள்ள பொய்க்காட்சியின் மூலத்தைத் தேடியறிய விரும்புவராயின், அவர் யாது செய்கின்றனர்? அவர் அக்காட்சியைக் காண்பதைவிட்டுத் திரும்பி, திரைக்கு முதுகைக் காட்டி, படத்தை வீழ்த்தும் கருவியினை நோக்கிச் செல்வர். அதை

யடைந்ததும், பின்னுள்ள படவடும் ஒளியு மாகிய சேர்க்கையே அப்பொய்த் தோற்றத் திற்குக் காரணமாவதை உணர்வார். அது போன்றே எண்ணற்ற இருடியரும் பொய்த் தோற்றமான பிரபஞ்சத்தைப் பின்புறமாக் கித் திரும்பி, அதற்கு மூலமாவது எல்லாம் உணர்ந்த எல்லாம் வல்ல பரமேசுரன் தமது அற்புதச் சக்தியாகிய மாயையுடன் சேர்ந் திருக்கும் நிலையே என்பதைத் தேடிக் கண் டுள்ளனர்.

சிலர் இன்னும் ஒருபடி முன்சென்றனர்; அப்போது மாயையும், அதனல் உண்டாக் கப்படும் நாம உருவங்களின் அளவற்ற வகை களும் முற்றும் மறைந்துவிட, பெயரோ வடிவோ குணமோ இலாத மெய்ப் பொரு என்றி மற்றென்றும் இல்லாது ஒழிகிறது. இதுவே பரம்பொருள், அதீத மெய்ப் பொருள், இரண்டற்ற ஏகப் பொருள்; இதுவே மாயையொடு இணைந்து பரமேசுவர ஞகக் காட்சியளிக்கின்றது. அதாவது, நாம் அவித்தை நிலையிலுள்ளவரைக்கும், அதன் பயனுக உலகத்தைக் காணும் வரைக்கும் பரப்பிரம்மம் பரமேச்வர வடிவமாகவும், மாயையெனும் ஆச்சரியமான சக்தியோடு கூடி அப்பரமேசுவரன் இப்பிரபஞ்சமெனும் மித்தைக் காட்சியை உண்டாக்கியும் நடத்தி யும் அடக்கியும் வருவதாகவும் தோற்றமளிக் கும்.

சுருங்கக் கூறின், இதுவே அத்வைத வேதாந்த மதத்தில் சிருஷ்டியைப் பற்றிய விவரணமாகும். பிரம்மத்தின் மாற்றமும் மாற்ற மின்மையும் கனவு கானல் நீர் என் னும் உவமைகளால் விளக்கப்படுகின்றன. ஆனல் இதனை விளக்கும் மாயையோ மெய்யு மன்று (ஸத் அன்று) பொய்யுமன்று (அஸத் தும் அன்று) இன்னதென்று வரையறுத்துக் கூற வொண்ணுதது (அநிர் வசனீயம்) எனப்படுகின்றது. அது சற்றும் அறிய முடியாததாகின்றது. ஒன்றுக்கொன்று எதி ரான இரு தன்மைகள் அவ்வாறு ஒன்று யிணைந்திருத்தலைச் சிந்தித்தலும் நமக்கு இய லாததேயாம்; பிரம்மத்தினிடத்து மாற்றத் தையும் மாற்ற மின்மையையும் ஒரே சமயத் தில் இருப்பதாகக் கருதுதல் இயலாதது போல, ஒரு முரண்பாட்டின் பொருத்தத்தை எடுத்துக் காட்டுதற்காக நாம் வேறொரு முரண்பாட்டைப் பயன் படுத்துவதாகிற தன்றோ? சிருஷ்டியைப் பற்றிய இரகசியம் இன்னும் நமது அறிவுக்கு எட்டாததாகின் றதல்லவா?

ஆம்; பேசப்படும் பொருளின் இயல்பி னலே அது என்றென்றும் அங்ஙனம் ஆதல் வேண்டும் என்பதாகின்றது. சிருஷ்டிக்குக் காரணமாகும் தெய்விகத் தூண்டுதலும், அதுகுறித்து நிகழும் முதல் முயற்சியும் எப் போதும் மறை பொருள்களாகவே இருத்தல் வேண்டும். இவை இயற்கை நிகழ்ச்சிகளைப் போன்ற செயல்களல்ல; காரணம் யாதெனின், அந்நிலையில் காலமோ தேசமோ காரணகாரிய நியதியோ இருப்பதில்லை; அவை அப்போது தோன்றியபாடில்லை. ஆத லின் இத்தகைய நிகழ்ச்சிகளைப் பற்றி 'ஏன்? எவ்வாறு?' என்ற வினக்கள் எழ வழி யில்லை. பரப்பிரம்மமோ மனவாக்குகட்கு அதீதமானது; அதைப் போன்றே சிருஷ்டிக் குக் காரணமாகும் ஆரம்பத் தூண்டுதல் களும் அவ்வண்ணமாதல் அவசியமே.

சிருஷ்டியின் இரகசியம் அறிய வொண் ணுதது என்பதை ரிக்வேதம் எடுத்துக் காட்டு கிறது; அது கூறுவதாவது; "இப் பலவகை யான படைப்பு (சிருஷ்டி) எங்கிருந்து கிளம் பிற்று என்பதை முற்றும் அறிய வல்லார் யாரே? அதனைப் பொருத்தமாகக் கூற வல் லார் யாரே? தேவரும் படைப்பின் பின் னரே தோன்றினர், ஆதலின் எங் கிருந்து அது உண்டாயிற்று என்பதை யார் அறிவார்?" ஒருவரும் இலர் என்பது வெளிப் படை; ஈசனர் தமது சங்கற்பத்தால் ஈதனைத் தையும் தம்மிடத்திருந்தே தோற்றுவித்தனர் என்பது சாஸ்திரங்களால் வெளியிடப்பட் டுள்ள உண்மை, இருடியர் நேரில் உணர்ந்த உண்மையுமாகும். இவ்வுண்மை நமது அறி வினை விஞ்சியிருப்பதனலே, வெறும் தருக்க முறை ஆராய்ச்சியால் நாம் ஒன்றும் முடிபு கட்ட இயலாது. நித்தியமாக மாறுதலற்ற பரம்பொருள் எப்போதும் மாறிக் கொண் டிருக்கும் பலதிறப்பட்ட பிரபஞ்சத்திற்கு ஆதாரமாகின்றது என்னும் கருத்தைக் கேட்டு நமது மனம் திகைக்கலாம்; ஆயினும் அது அவ்வாறுதான் உள்ளது. அதை ஓர் உண்மையாக நாம் ஒப்புக் கொள்ள வேண் டியதாகிறது. அதை மனிதனது தருக்க முறை அறிவால் ஒருக்காலும் விளக்க இய லாது. சிருஷ்டி ஏன் நிகழ்கிறது, எவ்வாறு நிகழ்கிறது என்றதை மனித அறிவால் ஒரு நாளும் காணமுடியாது. ஒன்றுக்கொன்று எதிரான பொருள்களை எடுத்துக் காட்டி நமது அறிவைக் குழம்பச் செய்யும் உண்மை எதுவோ, அதுவே மாயையென்று சுவாமி விவேகாநந்தர் விளக்குகின்றனர். நித்திய மான பூரணத் தன்மையையும் மாருத இயல்

பையும் பெற்றிருத்தலும், அதே சமயம் தமது இச்சையால் பிரபஞ்சத்தை ஆக்கலும் காத்தலும் அழித்தலும் ஈசர்க்கு இயலும். அவரது அறியவொண்ணா இயல்பு (பிரகிருதி) அத்தன்மையதாகும். அவரது அற்புதச் சக்தியும் அத்தன்மையதாகும். 'ஏன்? எவ்வாறு?' என்னும் வினாக்களைப் பற்றிய அல்லல் நமக்கு வேண்டாம்.

ஆயினும் சிருஷ்டியைப் பற்றிய உண்மை ஈசரை அடைந்தோரால் உணரப்படலாம். அவரை அறிவதால் படைப்பிலுள்ள யாவும் அறியப்படுகின்றன, எல்லாப் புதிர்களும் தீர்ந்து விடுகின்றன, இந்து சமயத்திற்குள் அடங்கிய பற்பல மத சித்தாந்தங்களின் நோக்கமும் யாதெனில், அவற்றைப் பின்பற்றுவாரை அத்தகைய உணர்வு நிலைக்கு நடத்திச் செல்வதே. சிருஷ்டியென்னும் உரைத்தற்கரிய இரகசியத்தைப் பற்றிச் சித்தாந்தங்கள் அளிக்கும் பற்பல முடிபுகளும், அவை அத்தகைய உணர்வு நிலையைச் சார்தற்கென வகுத்துள்ள பற்பல நெறிகட்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. சிருஷ்டியைப் பற்றிய அதீத மறைபொருள்களைப் பற்றிய முழு உண்மையையும் இவற்றில் எதுவும் எடுத்துக்கூற இயலாது. ஆயினும் ஒரு குறிப்பிட்டருசியும் அறிவுத்திறமையும் வாய்ந்த மக்கட் பகுதியொன்றினை மெய்ப்பொருட் காட்சியென்னும் நிலைக்கு இழுத்துச் செல்லப் பயன்படும் மதிப்பு ஒவ்வொன்றுக்கும் உள்ளதே. இம் முறையில் எதுவும் பிழையுற்றதாகாது, பயனற்றதுமாகாது.

வாசிட்டம்—வைராக்கியப் பிரகரணம்

(K. V. D. சாஸ்திரிகள்)

(தொகுதி 30-297-ம் பக்கத் தொடர்ச்சி)

சருக்கம் 18

இராகவன் திருவாய் மலர்ந்து மொழிந்ததாவது—மலம், மூத்திரம், உதிரம், கோழை, கொழுப்பு முதலிய கோதுப் பெட்டகமாய காயமும் துன்பத்தைத் தொடர்ந்து தருகின்றது. காயம் சடப்பொருளாக விருப்பினும் சேதனப் பொருளாகத் தோற்றமளிக்கின்றது. இதை ஆன்மாவாகக் கருதல் ஏற்குமோ? இஃது ஆன்மாவென்றும், ஆன்மா அல்லவென்றும் சொல்லற்கு ஏற்ற பொருளல்லவென்னும் ஐயத்தினை எழுப்பு மியல்புடையது. உருசியான சிற்றுண்டிகளைத் தின்று களிப்புற்றுப் பூரிக்கின்றது. காற்று, மழை, வெப்பம் முதலியவற்றால் வாடி ஒடுங்குகின்றது. காயம் மிக்க அசுத்தமாயது. இதைவிட அதமப்பொருள் ஒன்றுமேகாண்பது அரிது. எக்காலத்தும் தோன்றி அழியும் இயல்புடைய பற்களாகின்ற மொட்டுக்களை வெளியிட்டுப் புன்னகையென்ற பூவைப் புறம் விட்டுப் பாசத்தோற்றத்தைப் பரப்புகின்றது. இக்காயமென்ற மரத்தின்கண் இருபுயங்களே கிளைகள். பற்களே பறவைகள், தலையே பெரும் பழம். இருசெவிகளே பொந்துகள். கரங்களும், பாதங்களும் இலைகள். சீவன் என்னும் பறவை தங்கும் கூடு. இத்தகைய மரத்தின்கண் 'நான்' 'எனது' என்ற எண்ணம் கொள்வது ஏன்? ஆற்றைக் கடக்கக் கூலி கொடுத்துக் கொண்ட ஓடத்திலும், காயத்திலும் 'எனது' என்ற எண்ணம் வைக்கலாமா? பற்பல படுகுழிகள் பறித்த காயமென்ற கானகத்தில் உரோமங்களாகின்ற புற்கள் மூடிய பாழும் பள்ளத்தில் வீழ்ந்து அதோகதியை அடையலாமா? நரம்பு என்ற கயிறுகளால் கட்டப்பட்ட ஓசையில்லாத உடலென்ற படகில் ஒரு பூனை என யான் பதுங்கி வாழ்கின்றேன்.

உலகக் கானகத்தில் உடல் என்ற மரத்தில் சித்தமென்ற குரங்கு ஓடி ஆடி, அலைகின்றது. நீண்ட துன்பமென்ற சிதள் அனுக்கணமும் தின்று அழிக்கின்றது. இது பேராசைப் பெண் பாம்பு வாழும் பெரும் புற்று, கோபமென்ற காகம் குடிகொண்ட கோயில். புன்னகையென்ற பூ மலர்ந்த பெரும் மரம். நல்லது, பொல்லாதது என்ற இருவகைப் பழங்கள் நிரம்பியது. புயங்கள் என்ற பெரும் கிளைகள் பொருந்தியது. பிராணன் என்ற காற்றால் அசையும், அங்கங்கள் என்ற இலைகள் நிறைந்தது. பொறிப்பறவைகள் உறையும் பாசக்கூடு. இளமை என்ற நிழலில் காமன் என்ற வழிப்போக்கன் தங்கிக் களிக்கும் களம். தலை என்ற தரையில் உரோமமென்ற புல் செழித்து வளர்ந்து ஆண்பாலர், பெண்

பாலர் என்ற மிருகங்கள் மேயும் மேச்சற் காடு. ஆங்காரப் பருந்து கட்டிய கூடு.

ஆங்கார அரசன் அமர்ந்து ஆனந்தமடையும் அந்தப்புரம் இக்களேபரம். இஃது நித்தமாக விருப்பினும் இக்கணமே அழியினும் யான் வருந்தேன்.

பேராசை அரசி குடிகொண்ட பெரும் மாளிகை; பொறி விலங்குகள் தங்கும் தொழுவம்; இவ்வுடலினை யான் வேண்டேன். முதுகு எலும்புகள் என்ற மரச்சட்டங்கள் அமைத்து நரம்புகள் என்ற கயிற்றால் வரிந்து கட்டி, தோல் என்ற ஓலையால் மூடப்பட்ட இவ்வுடல் என்ற இல்லத்தை யான் வேண்டேன். அன்னக்குழாய்கள் என்ற கயிற்றால் கட்டி உதிர நீரால் நனைந்த நரை என்ற கோலப் பொடியால் கோலமிடப்பட்ட இக்காயமனையை யான் வேண்டேன். மனமென்ற பணியாளன் ஆற்றும் பற்பல சேட்டைகட்கும் பாத்திரமாய, மயக்க அருவி என்ற பெரும் கற்றூண் நாட்டப்பட்ட இக்காயத்தினையான் கனவிலும் வேண்டேன். தீராத்துயரக் குழவிகள் கதறி அலையும், இன்பமென்ற பஞ்சணைகளால் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பொல்லாப் பேராசை வேசிப்பெண் குடிகொண்ட இவ்வுடலினை யான் வேண்டேன். ஊத்தைச் சடமாய அஞ்ஞான அரசன் ஆக்கிய, இக்காயப் பூங்காவினை யான் வேண்டேன். செல்வம் மின்னற் கொடி போல் நிலைமையற்றது. கணப்பொழுதில் காலம் எல்லாவற்றினையும் கவனித்து அழித்து விடுகின்றது. மாமிசப் பிண்டமாய, உதிரத்தைப் பெருக்குகின்ற, அனுக்கணமும் அழிந்து கொண்டே, அழியா வண்ணம் தோற்றமளிக்கின்ற, காயத்தினை நேசித்தல் அடுக்குமோ? பற்பல ஆண்டுகள் உற்ற நண்பன் எனப் பாராட்டிக் கொண்டாடிய சீவனை விட்டுப்பிரியும் நன்றியறிவற்ற இக்காயத்தை நேசித்தல் தகுமோ? மத யானையின் செவிகள் எனச் சலிக்கின்ற ஆலிலையின் நுனியில் தூங்கும் பனிநீரென எக்கணமும் அழியும் இயல்புற்ற காயத்தினை நேசித்தல் தகுமோ? அஃது என்னை விட்டுப் பிரியும் முன் யான் அஃதினை விட்டுப் பிரிந்து பாய்வேன். பல்லாண்டு அரிய பானங்களைப் பருகியும், அறுசுவை உண்டி உண்டும், இளைத்து நாசம் அடையும், காயத்தில் ஆசை வைக்கலாமா? காயமென்ற பாமரன் ஒவ்வொருநாளும் அனுபவித்த இன்பத்தினையே நுகர்ந்தும், மீண்டும் மீண்டும் பலமுறை நுகர்ந்தும் நாணமடைவதில்லை. பல்லாண்டு அரசாண்டும் மிகுந்த செல்வத்தைசேவித்தும் பருப்பதுமில்லை. மேன்மை பெறுவதுமில்லை. அழியாத்தன்மை அடைவதுமில்லை. நரைக்கும் காலம் நரைக்கின்றது. மரிக்கும் காலம் மரிக்கின்றது. காயம் ஏழை மக்கட்கும், சீமான்கட்கும் ஒரே நிலைமை பெற்றுத் தோற்றமளிக்கின்றது. காயமே பெரும் ஆமை, அஃது உலகமென்ற கடலில் பேராசை என்ற பெரும் பள்ளத்தில், தன்னைக் காக்கவும், அங்கிருந்து வெளியேறவும் சக்தியற்று உறங்குகின்றது. உலகக் கடலில் காயமென்ற கட்டைகள் மிதக்கின்றன. அவற்றுள் சில பயன்படும். மற்றும் சில பயனற்று அழியும். அத்தகைய காயத்தினை யான் வேண்டேன்.

சருக்கம் 19

இவ்வுலகில் மானிடப் பிறவியைப்பெற்று அடையும் பால்யமும் துன்பத்தினையே அளிக்கின்றது. சக்தியின்மை, பேராசை, மதியின்மை, ஏழ்மை, முதலியனவும் பால்யத்தில் மக்களைப் பீடிக்கின்றன. கோபம், அழுகை முதலியவற்றால் கொடிய, ஏழ்மையால் நொந்த பால்யத்தினை அறிஞர் வேண்டார். இளமைப் பருவத்தில் மனதினைப் பீடிக்கும் வண்ணம் சிந்தைகள் வேறு ஒரு பருவத்திலும் பிடிப்பதில்லை. இளமைப் பருவத்தில் மக்கள் விலங்குகளை ஒத்து விளங்குகின்றனர். இளமைப்பருவம் அஞ்ஞானத்தின் பிரதிபிம்பம், பற்பல எண்ணங்களும் உதிக்குமிடம், மிகத்துச்சம், அங்ஙனம் தோற்றமளிக்கும் இளமையில் இன்பம்யாதுளது? நீரிலும், நெருப்பிலும், நித்தமும் அஞ்சி, கொஞ்சிக் கெஞ்சும், இளமையில் இன்பமுளதோ? பாலர்கள் பயனற்ற, துன்பக்கடலாய, கிரீடைகளில், மனத்தைச் செலுத்தி மயங்குகின்றனர். இளமையில் பெற்றோர், உற்றோர், அனைவரும் இடும் ஆஞ்ஞையை அனுசரித்து நடத்தல் அகத்தியமாயது பற்றி அல்லும் பகலும், இடைவிடாத் துயரமே மக்களை அணுகும். கொடிய இருள் சூழ்ந்த குகைகளில் கோட்டான் என, கொடிய நரகத்திற்கு ஏதுவாய தீயசெய்கைகள் இளமையைச் சேருகின்றன. இளமை இனியது என்று இயம்பும் மதிஈனர்களை அணுகி இணங்கல் ஆகாது. மனம் ஊசலாடிப் பற்பல எண்ணாத எண்ணிறந்த எண்ணங்களை எண்ணி ஏங்கிப் பரிதவிக்கும் நிலைமையான இளமையில் சிறிதேனும் இன்ப நுகர்ச்சியுளதோ? ஏனைய சீவராசிகட்கும் ஏனைய அவத்தைகளிலுமிருப்பதிலும் பன் மடங்கு அதிகத்துன்பம் இளமையில் காணும். மனம் நிலைமையற்றது. இளமையோ மிகச் சலமா

யது. அவ்விரண்டும் ஒன்று சேர்ந்து விளைக்கும் தீமைகளைத் தொகுக்க எங்ஙனம் இயலும்? இளமையில் மனம், பெண்பாலர்களின் கண்ணோட்டம், மின்னற்கொடி, திரைமாலை, தீப ஜ்வாலை, முதலியவற்றை நல்லாசிரியனாகக் கொண்டு நிலையின்மை என்ற பெரும் கல்வியினைக் கற்று விளங்குகின்றது. இளமையும், மனமும், எக்காலமும் எப்பணியையும் ஒன்றுக்கொன்று உதவி நாடி முடிக்கின்ற அரிய சகோதரர் எனத் தோற்றமளிக்கின்றன. செல்வரை உற்றார் உறவினர் அண்டிப்பிழைக்கும் வண்ணம் ஏனைய ஆதி வியாதிகளும் இளமையை அண்டுகின்றன. இளையோர் அனுதினமும் புதிது புதிதாக ஏதேனும் ஒன்றை அடையாவிடில் துன்பம்தீண்டி வாடுகின்றனர். பாலர்கள் நாயென எளிதில் வயமாகின்றனர். எளிதில் சினம் கொள்கின்றனர். மலப் பொருட்களில் விருப்பம் காட்டுகின்றனர்.

தாம் நாடிய பொருள் கிட்டாவிடில் பாலர்கள் மனம் நொந்து தவிக்கின்றனர். எட்டாப்பொருள்களை எட்டிப் பிடிக்க ஊக்கமூட்டும் இளமை. எண்ணவொண்ணா எண்ணங்களை எண்ண ஏவும் இளமை. கோடையில் கானகமென எண்ணாத எண்ணங்களை எண்ணித்தவிக்கும் இளம் மனம். பாலர்கள் பள்ளியில் பாடம் படிக்கவும், பிறர்க்குப் பயப்படவேண்டும். உலகத்தினை ஆளவும், ஆகாயத்தில் அம்புலியைக் கைப்பற்றவும் பேரவாக்கொள்ளும் இளமையில் இன்பம் யாதுளது? துன்பத்தை உள்ளத்தில் உணர்ந்தும் துன்பம் நீங்கான். சக்தியற்ற சடப் பொருளாய மரத்திற்கும், பாலர்கட்கும் வேற்றுமை சிறிதுமே இல்லை. பசிப்பிணியால் வருந்திப் பயந்து நடுங்கிப் பறவைகள் எனப் பறக்க விரும்பி முடியாது தவித்துத் தத்தளிக்கின்றனர். இளமையில் குரவர், பெற்றோர், தன்னிலும் பலமுடையோர், முதலியவர்களைக்கண்டு பயப்படவேண்டும். ஏனைய தீமைகட்கும் பிறந்த மனையாயும், அஞ்ஞானமென்ற அரசன் களிக்கும் களமாயும், விளங்கும் இளமையை ஒருவரும் விரும்பவேண்டாம்.

தூய கருத்துக்கள்

டி. ஆர். ராமநாத சாஸ்திரி. B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

6—உண்மை வீரன்

ஹரூன் அல் ரசீத் என்ற சக்ரவர்த்தியின் மைந்தர்களுள் ஒருவன் தந்தையிடம் 'சேனாபதியின் மைந்தன் என்னை மிகவும் இழிவாகத் திட்டி விட்டான்' என்று முறையிட்டுக் கொண்டான். ஹரூன் அல் ரசீத் உடனே அமைச்சர்களை அழைத்துச் செய்தியைக்கூறி 'இதற்கு என்ன விதமான தீர்ப்பு அளிக்கலாம்? கூறுங்கள்' என்று வினவினான்.

'உடனே கொன்று விட வேண்டியதுதான். இதில் ஆராயவேண்டியது ஒன்றும் இல்லை' என்றான் ஒரு மந்திரி.

'அந்தப் பாபியின் நாவைத் துண்டித்து விடவேண்டும்' என்றான் மற்றொரு மந்திரி.

நாட்டைவிட்டு அவனை வெளியேற்றி விட்டால் போதும்' என்றான் வேறொரு அமைச்சன்.

பிறகு ஹரூன் தன் மைந்தனை அழைத்து அருகில் உட்காரச் செய்தான். அன்புடன் தழுவிக்கொண்டு 'குழந்தாய்! நான் சொல்வதைக் கவனத்துடன் கேள். சேனாதிபதியின்புதல்வன் குற்றம்செய்தது உண்மையே. ஆனால் அந்தக் குற்றத்தை முழு மனதுடன் மன்னித்துவிடுதல் உயர்ந்த முறையாகும். சினம் ஏற்படுவதற்குக் காரணம் இருந்தும் எவன் அமைதி பெற்றிருக்கிறானோ, அவனே உண்மை வீரனாவான். அந்தத்திறமை உன்னிடம் இல்லாதிருந்தால், நீயும் அவனைத் திட்டி விடலாம். அது தாழ்ந்த முறையாகும். மூன்றாவது முறை எதையும் நான் ஏற்க மாட்டேன்' என்று கூறினான்.

7—நீந்தத் தெரியுமா? தெரியாதா?

ஓர் அறிஞனை வாலிபன் ஆற்றைப் படகிலேறிக் கடந்து கொண்டிருந்தான். அவ்வறிஞன் வானை உற்று நோக்கினான். படகோட்டியை அழைத்துச் 'சகோதரா! நீ நக்ஷத்திர சாஸ்திரத்தை அறிவாயா?' என்று வினவினான்.

'ஐயா! நக்ஷத்திரங்களின் பெயர் கூட எனக்குத் தெரியாதே' என்று படகோட்டி விடையளித்தான்.

'அவ்விதமாகின் உன்வாழ்நாட்களில் கால் பாகம் வீணாயிற்று' என்றான் அறிஞன்.

சிறிது நேரத்திற்குப்பிறகு 'சரி. கனித சாஸ்திரமாவது தெரியுமா?' என்று வினவினான் அறிஞன்.

'தெரியாது ஐயா' என்று பதில் வந்தது.

'உன் வாழ் நாட்களில் அரைப்பகுதியும் வீணாயிற்றே' என்று பரிதாபத்துடன்சொன்னான் அறிஞன்.

படகோட்டி நாணத்தினால் மௌனமாக இருந்தான்.

சிறிது நேரம் கழிந்தது. படகு ஆற்றின் மையத்திற்கு வந்தது. இரு புறங்களிலும் கரையோரங்களில் பசுமை நிறத்துடன்விளங்கிய மரங்களைக் காண்பித்துத் 'தாவர சாஸ்திரத்தையாவது பயின்றிருக்கிறாயா?' என்று அறிஞன் வினவினான்.

'ஐயா! என் என்னை நாணமடைவிக்கிறீர்.! சாஸ்திரமோ, கிஸ்திரமோ எனக்குத் தெரியாது. படகோட்டத் தெரியும். அதைக் கொண்டு வயிறு வளர்த்து வருகிறேன்' என்றான் படகோட்டி.

அறிஞன் சிரித்துக்கொண்டே 'அவ்விதமாகில் உன் வாழ்வில் முக்கால் பங்கும் வீணாகிவிட்டதே. உன் நிலைமையைக் குறித்து வருந்துகிறேன்' என்று சொன்னார்.

இவ்விதம் பேசிக் கொண்டிருக்கையிலேயே, எதிர்பாராதமுறையில் வானில் கார் முகில்கள் சூழ்ந்தன. எங்கும் இருள் பரவியது. கொடிய புயற்காற்று வீசத் தொடங்கிற்று. ஆற்றில் அலைகள் தோன்றின. படகு அசைந்தமையினால் நீர் படகை நிரப்பி மூழ்கச் செய்யலாயிற்று. வேறுவழியில்லை என அறிந்ததும் படகோட்டி நீரிற் குதித்தான். நீந்திக்கொண்டே, 'அறிஞரே! நீந்தத் தெரியுமா? தெரியாதா' என்று வினவினான்.

'நீந்தத் தெரிந்தால் நானும் குதிக்க மாட்டேனா? எனக்குத் தப்புவதற்கு ஏதாவது வழியுண்டா? சொல், தம்பி' என்று வருத்தத்துடன் அறிஞர் வினவினார்.

'பல கல்விகளைப் பயின்றீர். நீந்தும் கல்வியைப் பயிலாது போனீர். நீர் கற்றவை எல்லாமும் உம் வாழ்வும் வீணாயின. மூழ்குவதைத்தவிர இப்பொழுது வேறு வழியில்லை. கடவுளை நினைத்துக்கொள்ளுங்கள்' என்றான் படகோட்டி.

உலக வாழ்க்கைக் கடலில் நீந்திக் கரையேறுவதற்கு முக்கியமான கடவுளை அண்டுதல் என்ற ஒரு கலையைப் பயிலாமல், வேறு கலைகளைப் பயிலுபவரின் முடிவு இதேதான்.

8—விந்தைத் தீர்ப்பு

கல்கத்தாவில் லக்ஷ்மிநாராயணன் என்ற சாதுவான வியாபாரி இருந்தார். ஒரு சமயம் இரு சகோதரர்கள் தம் தந்தை விட்டுச் சென்ற செல்வத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் வாதுசெய்து கொண்டிருந்தனர். பொது மனிதர் உதவியினால் ஒருமாதிரி பிரிவு ஏற்பட்டது. ஆனால் ஒருவைரமோதிரம் இல்லத்தில் இருந்தது. அதை இரு சகோதரர்களும் விரும்பினர்.

லக்ஷ்மிநாராயணன் தீர்ப்பும் பயன் படாதொழிந்தது. 'ஒருவர் மோதிரத்தைப்பெறட்டும்; மற்றவர் அதன் மதிப்புப் பொருளைப் பெறட்டும்' எனக்கூறினார். இருவரும் பிடிவாதமாயிருந்தனர்.

லக்ஷ்மிநாராயணன் அந்த மோதிரத்தைப் போன்ற மற்றொரு மோதிரத்தைப் செய்து வைத்துக்கொண்டார்.

மோதிரத்தைக் கையில் அணிந்து அதைத் தம்பிக்கு கொடுக்கமறுத்த முதல்வனையழைத்தார். 'சிறுவா! உன் தம்பியிடம் நல்ல மொழிகளைக் கூறி அவன் அம் மோதிரத்தை விரும்பாதவிதம் செய்து விடுகிறேன். நீயே மோதிரத்தை வைத்துக் கொள்ளலாம். அவனுக்கு அதன்விலையையும் நீ கொடுக்கவேண்டாம். ஆனால் ஒன்றுமட்டும் நினைவிருக்கட்டும். நீ அதையணியாது இல்லத்திலேயே வைத்திருக்கவேண்டும். நாட்கள் செல்லச் செல்ல அவன் அதை முற்றிலும் மறந்துவிடுவான்' என்று கூறினார்.

அண்ணன் அதை ஏற்றுக்கொண்டு மகிழ்வுடன் இல்லமேகியவுடன் தம்பியை அழைத்துத் அவனிடம் தான் செலவிட்டுச் செய்த மோதிரத்தைக் கொடுத்து 'குழந்தாய்! நீ மோதிரத்தை வேண்டினாய். மிகவும் வாதாடி எவ்விதமோ அதைப்பெற்று உனக்கு அளித்துவிட்டேன். ஆனால் நீ அதை எப்பொழுதும் வெளியில் அணிந்து செல்லக் கூடாது. அதைப்பற்றிய பேச்சை எடுக்கவே கூடாது. அவ்வாறு பேசினால் உன் அண்ணனுக்குத் தான் தோல்வியுற்றதாகத் தோன்றும், என்று கூறினார்.

தம்பியும் 'அங்ஙனமே ஆகட்டும்' என்று கூறிச் சென்றான்.

இரண்டு மூன்று ஆண்டுகள் கழிந்தன. இரு சகோதரர்களும் மறுபடியும் நேசத்துடன் பழகத் தொடங்கினர். முறையே இருவரும் மோதிரத்தைப் பெற்றிருப்பதை அறிந்தனர். ஒரு மோதிரம் லக்ஷ்மி நாராயணன் பொருட்செலவில் செய்யப் பட்டதையறிந்து அதை அவரிடம் கொடுத்துவிட இருவரும் சென்று வேண்டினர்.

'குழந்தைகாள்! நான் உங்களைவிடப்பெரியவன். அதிகமான செல்வத்தையும் பெற்றவன். இந்தப்பரிசை அளிக்க உரிமை எனக்குண்டு. இதைத் திரும்பிப் பெறேன் எவ்விதமாவது உங்கள் தகராறு தீர்ந்ததே! அதுவே மகிழ்வைத் தருகிறது' என்று கூறி லக்ஷ்மிநாராயணன் அம்மோதிரத்தைப் பெற மறுத்தார்.

பக்தியே முக்தி

(டர்பான் ச. மு. பிள்ளை)

பக்தி யென்பது தெய்வபக்தி, குருபக்தி, பித்ருபக்தி, மாத்ருபக்தி எனப் பலவகைப்படும். பக்தி என்பது ஐம்புலன்களையும் அவ்வவ்வழிச்செல்ல விடாமல் மனத்துடன் சேர்த்துச் சிந்தித்தலேயாம்.

அப்பியாசத்தினாலேயே பக்தி சித்திக்கும். இதைவிட ஞானம் சிறந்ததென்றாலும், அந்த ஞானத்தைவிட தியானமாகிய பக்தியே சிறந்ததென்று கீதையில் பகவான் சொல்லியிருக்கிறார். பகவான் பாராட்டிய பக்தியை, ஏன் ஒவ்வொருவரும் "நன்மைகடைப்பிடி" என்னும் முதுமொழிப்படி ஏற்றுக்கொள்ளக் கூடாது? அருணகிரிநாதரும் பக்தியின் சிறப்பைக் குறித்து,

"பக்தித் துறையிழிந் தானந்த வாரிபடிவ
தினென்
புத்தித் தரங்கந் தெளிவ தன்றே"

என்று ஏங்கி நின்றார். இன்னும் இதைவிட மேலானது மானிடர்க்கு எது வேண்டும்? மனிதர் கல்வி பயில்வதெதற்காக? யாவும் புத்தி தெளிவதற்கன்றோ?

பின்னும் யோகமார்க்கமாய் வீடுபெறுவதைக் காட்டிலும், பக்திமார்க்கமாய்ப் பெறுவது மிகவும் லேசானது என்பதை

"காட்டிற்குறத்தி பிரான் பதத்தே கருத்
தைப் புகட்டின்
வீட்டிற் புகுதமிக வெளிதே; விழி நாசி
வைத்து
மூட்டிக்கபால மூலாதார நேரண்ட மூர்ச்
சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்
கும் யோகிகளே"

என்று காட்டியுள்ளார் அப்பெரியார். பின்னும் அன்னாரே அதன் மகிமையை விவரித்துச் சொல்லுங்கால்,

"பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பினான்
மெள்ள மெள்ள வுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித்
தறிந்த வன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்
தறக் கைத்ததுவே"

என்றார். அந்த அரும்புந் தனிப்பரமானந்தமே பக்தி.

மணிவாசகப் பெருமான், "பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செயும் பித்தன்" என்று கூறியிருப்பதாலும், பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்திபெறலா மென்பது திண்ணம். மற்றும் "பக்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி" என்றும் கூறப்பட்டிருப்பதால் பக்தியின் சிறப்பு இனிது விளங்குகின்றதன்றோ?

மணிவாசகர் பின்னும்,

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்
வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள்
பாறும் வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கியெனை
யாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவா
ரச்சோவே"

என இரங்குவதைக் காண்மின்!

ஸ்ரீமத் சங்கரரும் பக்திஸ்வரூபத்தைச் சொல்லுங்கால்; "விதையானது தரையில் வீழ்ந்து, அது செடியாக முளைத்துப் பெரு

மரத்தைச் சார்வது போலவும், ஊசியானது காந்தத்தினிடமும், உத்தம பதிவிரதை தன் புருடனிடமும், சிறுகொடியானது விருட்சத்தினிடமும், நதியானது சமுத்திரத்தினிடமும் எந்த விதமாய்ச் சேருகின்றனவோ அதுபோல மனமானது ஈசனது பாதகமல யுகளங்களில் சதா காலமும் பொருந்தி யிருப்பதுவே பக்தி" என்று கூறி இருக்கிறார். குழவியைத் தாய் காப்பாற்றக் கடமைப் பட்டிருப்பது போல, பக்தனை ஈசன் காக்கக்கடமைப் பட்டிருக்கிறான்.

பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, பலமார்க்கங்களிலும் தன்னைச் சேருவதற்குப் பக்தி மார்க்கமே சிறந்ததென்றும், பக்தர்கள் தம்முடைய ஸ்தூல தேகம் விட்டு நீத்த பின் தன்னிடம் ஐக்கியமாவார்கள் என்பதாகவும் கூறியிருக்கிறார்.

மேற்கூறிய ஆதாரங்களினால் பக்திநெறியைக் கைவிட்டு வேறு மார்க்கத்தைக் கைக்கொள்ளுதல், நல்ல வழியிருக்கச் சந்துகளில் செல்வது போலவும், கனியிருப்பக் காய் கவர்ந்தது போலவுமே யாம். மற்ற மார்க்கங்கள் கடினமானதால் கைவிட நேர்ந்து பயனில் உழவாய் முடியும். ஆதலின் பக்தியே முக்திக்குக் காரணம்.

நாம் விதிக்கு அடிமையா?

(ஸ்ரீ சுவாமி யதீஸ்வரானந்தர் எழுதியதன் மொழிபெயர்ப்பு)

ஒருநாள் சுல்தான் மன்னர் டமாஸ்க்ஸ் நகரில் தமது அரண்மனையில் இருந்தபோது, அவருக்கு மிகவும் பிரியமான ஓர் அழகிய இளைஞன் அவரது முன்னிலையிலே விரைந்து வந்து, தான் உடனே பாக்தாத்துக்குப் போக வேண்டும் என்று மிக்க பரபரப்போடு கூறினான். அரசர்பெருமானது குதிரைகளுள் மிக்க வேகமாகச் செல்லும் ஒன்றின் மீது ஏறிச் செல்வதற்கு அவரது அனுமதியையும் வேண்டி நின்றான். சுல்தான் அவனை நோக்கி, "என் இவ்வளவு அவசரம்?" என்று வினவினார்; இளைஞனும், "அரண்மனையிலுள்ள பூங்காவனத்தின் வழியாக நான் சென்றபோது, எமன் தனது கைகளை நீட்டி என்னைப் பிடிப்பதாகப் பயமுறுத்திய காட்சியை நான் கண்டேன். சிறிது நேரத்தையும் இழக்காமல் யான் அவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்" என்று பதில் அளித்தான். தனக்கு வேண்டிய குதிரையை உபயோகித்துக் கொள்ளும் அனுமதியை அவ்விளைஞன் பெற்றான்; அவன் வெளியேறியதும் சுல்தான் பூங்காவனத்திற்குச் சென்றார். யமன் அப்போதும் அங்கே நின்று கொண்டு இருந்தான். "எனக்குப் பிரியமான இளைஞனை நீ ஏன் பயமுறுத்துகிறாய்"? என்று அரசர் அதிகாரத்துடன் அவனைக் கேட்டார். அப்போது யமனும், "இங்கே அவனைக் கண்டதும் ஆச்சரியத்தால் என் கைகளை அவனை நோக்கி நீட்டினேன்; ஏனெனில் பாக்தாத்தில் இன்றிரவு நான் அவனைச் சந்திக்க வேண்டியவன்" என்று மறுமொழி அளித்தான். இது விதியின் செயலா?

நமது ஞான யாத்திரையிலே பலமுறை தோல்வி அடைந்து அரும்பாடுபடும் போதெல்லாம் நம்மிடம் பின்வரும் கேள்வி உதிக்கின்றது; இயற்கைச் சக்திகளால் விளையாட்டுப் பொம்மைகள் போன்று ஆட்டுவிக்கப்படும் கருவிகளா நாம்? இல்லையேல், இவ்வுலக காரியங்களை நடத்திவரும் தெய்வங்களுக்கு நாம் அடிமையா? நம்மவரின் விதிகளைத் தம் இச்சைப்படி நடத்துவதாகப் பலரும் நம்பும் ஓர் இறைவனது இரக்கத்தை எதிர்பார்த்து நிற்கும் கதியற்ற பிராணிகளா? இக் கேள்விகட்கு விடையாக இந்துமத சாஸ்திரங்களிலிருந்து யான் பொறுக்கி எடுத்துள்ள ஒரு சில மேற்கோள்களை உங்கட்குத் தருகிறேன்; அவை நமது ஞான வாழ்க்கையில் தன்முயற்சியின் அவசியத்தை வற்புறுத்துகின்றன:

பலவீனமுடையோராலும் கவனமற்றவராலும் ஞான சாதனங்களை ஒழுங்காகப் பழகாதவர்களாலும் பரம்பொருள் அடையப்படமாட்டாது. தக்க சாதனங்கள் மூலமாக முயன்றுவரும் அறிஞன் அகண்ட பரம்பொருளை உணருகின்றான். (முண்டக உபநிடதம் 3—2,4.)

ஆன்மாவை உடல் என்னும் ரதத்தின் மீது அமர்ந்திருக்கும் எஜமானனாக அறிக, புத்தியை ரதசாரதியாகவும், மனதைக் கடிவாளமாகவும் கருதுக. இந்திரியங்கள் குதிரைகளாகின்றன; ஐம்புலப் பொருள்கள் (விஷயங்கள்) செல்லுதற்குரிய மார்க்கங்களாகின்றன. ஆன்மா உடலோடும், இந்தி

ரியங்களோடும், மனதோடும் ஒன்றுபட்டு நிற்கும்போது அறிஞர் அதனைப் போக்தா (அனுபவிக்கின்றவன்) என்று அழைப்பர். (கட உபநிடதம், 3—3,4)

எப்போதும் அடங்காத மனதைஉடைய வனாகி, ஒழுங்கான ஞானமும் இல்லாதிருப்பவனுக்கு அவனது இந்திரியங்கள் சாரதிக்கு அடங்காத துஷ்டக் குதிரைகள் போல் உள்ளன. ஆனால் எப்போதும் அடங்கிய மனமும், சரியான ஞானமும் உடையவனுக்கோ அவனது இந்திரியங்கள் சாரதிக்குட்பட்ட நல்ல குதிரைகள் போல அடங்கி நிற்கும். (கட உபநிடதம், 3—5,6,9.)

நல்வழிகளிலும் தீயவழிகளிலும் ஓடிக் கொண்டேயிருக்கும் சம்ஸ்காரங்களை (சுபாவங்களைத்) தன் முயற்சியால் ஒருவன் நன்னெறியிலே செலுத்த வேண்டும். அவை தீயநெறியில் பிரவேசிக்கும் பொழுது நன்னெறியில் திருப்பப் படவேண்டும். (முக்திகோபநிடதம் 2—5—6)

மனிதர் தமது சுய முயற்சியினாலேயே தாம் விரும்பும் பொருள்களைப் பெறுகிறார்கள். முயற்சி செய்யாதவரே விதியைப் பற்றிப் பேசுவர். சோம்பேறிகளும் விதியையே முழுவதும் நம்பி இருப்பவரும் ஒருக்காலும் தமது இலஷியத்தை அடையார். ஆதலால் ஒவ்வொருவனும் எல்லாப் படியாலும் சுய முயற்சியை உறுதியாகப் பற்றி நிற்க வேண்டும். (மத்ஸ்ய புராணம்.)

ஒரு மனிதன் தன்னாலே தன்னை உயர்த்திக் கொள்வான் ஆக; தன்னைத்தானே தாழ்த்திக் கொள்ளக் கூடாது. தனக்குத் தானே உறவினன், தனக்குத்தானே பகைவன். எவன் தன்னைத் தானே வென்றவனோ அவன் தனக்குத்தானே உறவினன். ஆனால் தன்னை வெல்லாதவனுக்குத்தானே பகைவனது நிலைமையில் உள்ளவன் ஆவான். (பகவத் கீதை 6—5,6.)

கருமத்திலேயே உனக்கு அதிகாரம், ஒரு போதும் பயனில் அன்று, பயன் கருதிக் கருமம் செய்பவனாக ஆகாதே; செயலின்மையிலும் உனக்குப் பற்று வேண்டாம். (பகவத் கீதை, 2—47.)

எல்லாக் கருமங்களையும் பகவானிடம் சமர்ப்பணம் செய்து, மனதை உள்ளிருக்கும் ஆத்மாவிடம் நிலை நிறுத்தி ஆசை அற்றவனாய் எனது என்ற பற்று அற்றவனாய் இருந்துகொண்டு மனக் கொதிப்பற்றவனாய்ப் போர்புரிக (பகவத் கீதை, 3—30.)

நீ எதைச் செய்யினும் எதை உண்ணினும், எதை ஓமம் செய்யினும் எதைத் தானம் செய்யினும், எத்தவம் செய்யினும், அதைப் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்க. இவ்வாறு செய்யின் நல்ல பயன்களையும் தீய பயன்களையும் அளிக்கும் கர்மக் கட்டுகளினின்று நீ விடுபடுவாய். விடுபட்டு, சன்னியாசி யோகத்தில் (துறவில்) நிலை பெற்ற உள்ளத்தினனாய்ப் பரம்பொருளை அடைவாய். (பகவத் கீதை, 9—27,28.)

பல அறிவாளிகள் இயற்கைச் சக்திகளின் சர்வாதிகாரத்திலே நம்பிக்கை கொண்டவராய், மனிதனது விதியை அவையே முழுவதும் அடக்குகின்றன என்று நினைத்தனர்; ஆனால் வேறு ஒரு கட்சியாரோ "மனிதனே எல்லாப் பொருட்கட்கும் சட்டமிடுபவன்" என்றும், ஊழ்வினைக்கு அவன் முழுவதும் அடிமைப் பட்டவன் அல்லன் என்றும் தனது சொந்த விதியைப் பிறர்க்கு மத்தியில் விரும்பியவாறே மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடும் என்றும் கூறுகின்றனர்.

நல்ல வாழ்விற்குச் சுதந்திரமே அவசியமான அடிப்படையாகும் என்று பிளேட்டோ என்னும் தத்துவ ஞானியார் வற்புறுத்துவார். மனிதனுக்குத் தன் ஆசைகளைப் பின்பற்றித் திரியவும், அவற்றை அடக்கி ஆளவும், தீமையை வெல்வதினால் உயர்ந்த வாழ்வை அமைக்கவும் சுதந்திரம் வேண்டுமென்று அவர் கருதுவார். அரிஸ்டாட்டில் என்னும் தத்துவ ஞானியாரும் மனிதனது சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டவர். ஒழுக்கம் என்பது ஒருவனால் தன்னிச்சைப்படி சுய முயற்சியின் பயனாக அடையக் கூடியது என்பதே அவரது கொள்கையும். "நன்றும் தீதும் தான் தரவருமே" என்பார் அவர். இதற்கு மாறாக ஒரு கட்சியார் கொள்வதாவது, இப்பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றுக்கும் இறைவனது ஆணையே உற்பத்தியும் தொடக்கமும் ஆகும் என்பது. ஆயினும் அவர்களும் நீதி நெறியைப் பின்பற்றவோ மீறவோ ஓரளவிற்கு மனிதனுக்கு சுதந்திரமுண்டு என்பர். மனிதன் தனது ஆசைகட்கு முற்றும் வசப்பட்டு, அவற்றிற்கு அடிமை ஆகலாம்; அன்றேல் அவற்றை வென்று முக்தி அடையலாம். ஆன்மாவிற்கு சுதந்திரம் உண்டு என்ற கருத்து ஆதிகிறிஸ்துவ மத சிந்தனையாளர்க்குள்ளும் வழங்கி வரலாயிற்று. அகஸ்டைன் போன்ற பிறஞானியரும், ஆதாம் காலத்தில் மனிதனுக்கு சுதந்திரம் இருந்தது என்றும், பின்னால் அவனது பாபச் செயல் காரணமாக அந்த சுதந்தி

ரத்தை மனிதன் இழந்தான் என்றும் கொள்கின்றனர். இதுதான் ''ஆதிப் பாவம்'' என்ற கொள்கையாகும்; இதன்படி ஆதாமின் பாபம் அவனது சந்ததியர்க்கு எல்லாம் தலைமுறை தலைமுறையாக வருவது என்று நம்பப் படுகிறது. ஆகையால் மனிதன் பிறவியிலே பாபி ஆகிறான், இறைவனது அருளாலே மட்டும் அவன் மோக்ஷம் பெறக் கூடும் என்பதாகிறது. ஏசுநாதரின் அருட்பணியை ஒப்புக் கொள்ளமாட்டாதவர் நித்ய நரகத்திடையே அழுந்தும் விதியுடையவர் ஆவர்.

யான் ஐரோப்பாவிற்கு முதன் முதல் சென்றபோது அங்குள்ள மதக் கொள்கைகளின் நிலையை ஆராய்ந்து பார்த்தேன். ஆதிப் பாவம், ஒருவரது பாவத்தை வேறொருவர் ஏற்று வருந்துதல், குறிப்பிட்ட ஒரு மதகுரவரால்மட்டும் உய்வு உண்டு — என்ற கொள்கைகள் அந்நாட்டிலே மக்களது சுய ஞான முயற்சியைப் பெரிதும் நீக்கிவிட்டன என்ற உண்மையைக் கண்டறிந்த போது யான் பேராச்சரியம் எய்தினேன். மனிதர் பிறவியிலே பாபிகள் ஆதலால் அவர்கள் கதியற்றவர் என்ற நினைவு அவர்களது உள்ளத்திலே ஊறியிருந்தது.

அறுதியான ஞானவிளக்கம் இறைவனது அருளாலே வருகின்றது. ஒளியைப் பற்றி நினைக. ஒளி உள்ளது; நாம் தூய்மை பெறும் அளவிற்கு, ஒளி நம்மிடத்து விளங்குகிறது. கிறிஸ்தவமத நிலையங்கள் சிலவற்றில் பாவத்தைப் பற்றியும் நரகத்தைப் பற்றியும் அளவிற்கு மிஞ்சிய பேச்சும், ஞான ஒளியின் இருப்பைப்பற்றி அளவிற்கு மிக்க குறைந்த சிந்தனையும் உள்ளன. இம்மாதிரியான மதத்தினின்றும் இளைஞர் வெளியேறுவதற்காக நான் அவர்களைக் குற்றஞ் சாட்டமாட்டேன். தற்கால மக்களிற் பெரும்பாலோர் சுவர்க்க நரகங்களைப் பற்றிய கருத்துக்களைப் பொருட்படுத்தா தொழிகின்றனர். முன்னரே எல்லாம் விதிக்கப்பட்டுள்ளது எனும் கொள்கை உண்மையாயின், ஒழுக்கத்தையும் ஞானத்தையும் பெறுதற்காக முதலடியெடுத்து வைப்பதிலும் முயற்சி செய்வதிலும் பொருளே இல்லை.

மதத்தைப் பற்றிய பொது ஜனக் கொள்கைகளில் எல்லாம் வல்ல விதியைப் பற்றிய கருத்து ஓரளவிற்கு உண்டு. தனியூழ்க் கொள்கையிலுள்ள முக்கிய கருத்தாவது, சுயமுயற்சியைத் தொடங்குதற்கு அது யாதும் இடந்தருவதில்லை யென்பதே.

ஊழ் எனும் கொள்கைக்குப் பெரிதும் இணையானது வேறொன்று இறையாணை (பகவத் ஸங்கல்பம்) என்பது; இதன் பொருளாவது; 'அநாதி கால முதலே இன்னது இன்னவாறு நிகழ வேண்டும் என இறைவன் முன்னரே ஸங்கற்பித்துள்ள மாற முடியாத தீர்மானம்' என்பதே. இம்முறைப்படி மனித வாழ்க்கை கிட்டத்தட்ட ஒரு பொம்மையாட்டத்தின் நிலைக்குக் குறுகிவிடுகிறது. ஆயினும், இக் கொள்கையினின்றும் வேறுபட்ட சில கொள்கைகளின்படி, மனிதனுக்கு ஓரளவு சுயேச்சை உண்டென்பதும், இந்த சுதந்திரத்திற்கும் தெய்வத்தின் ஸர்வக்ஞத்துவத்திற்கும் நல்லியல்புக்கும் முரண்பாடு இல்லை என்பதும் அறியப்படுகின்றன

மதத்துறையில் பெருந்தலைவராக விளங்கும் (நியூ இங்கிலாந்தைச் சார்ந்த) லைமன் பீச்சர் என்பவரைப் பற்றிய ஒரு கதை எனக்கு நினைவு வருகின்றது. ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று அவரும் அவர்க்கு அண்டையில் வாழ்ந்த ஒரு மதப் பிரசாரகரும் ஒருவரது பிரசங்க மேடையில் மற்றொருவர் பேச வேண்டுமெனத் தீர்மானித்திருந்தனர்; பின்னவர் 'இறை ஆணை' எனும் கொள்கையில் நம்பிக்கை ஊன்றினவர். அந்த ஞாயிற்றுக் கிழமையன்று இருவரும் நடு வழியில் சந்தித்தனர். இருவரும் குதிரையேறி வந்தனர், ஒருவர் மற்றொருவரது கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தனர். இரண்டாவது போதகர் பீச்சரைப் பார்த்து, ''பீச்சர்! உலகம் உண்டாவதற்கும் முன்பே இந்த ஞாயிற்றுக் கிழமையன்று நீர் எனது கோயிலிலும் நான் உமது கோயிலிலும் மதப் பிரசங்கம் செய்ய வேண்டும் என்று இறைவன் சங்கற்பித்திருந்தான்'' என்றனர். பீச்சர் உடனே 'அப்படியாயின் யான் பிரசங்கம் செய்யேன்' என்று கூறிவிட்டுத் தமது குதிரையைத் திருப்பித் தமது சொந்தக் கோயிலுக்கே ஏகினர்.

நாம் அனைவரும் கொள்ள வேண்டிய சரியான மனநிலை இதுவே. நாம் வெறும் கருவிகளாவதற்கு நாமே ஒருக்காலும் இடங் கொடுக்கக் கூடாது.

மொய்யான மதக் கொள்கையும் பொய்யான சோதிடமும் மக்களின் வாழ்க்கைக்கு இடையூறாக நிற்பதை யான் கண்டுள்ளேன். சோதிட சம்பந்தமான கணிதங்களில் நம்பிக்கை கொண்டு மக்கள் சுய முயற்சியைத் தொடங்கும் திறமையையும் இழக்கின்றனர்; ஆனால் சோதிடங் கூறும் பலன்கள் பெரும்

பாலும் நாளடைவில் பொய்யாகப் போவதும் உண்மையன்றோ? பலர் நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் ராசிகளையும் குறைகூறி, தமது தோல்விகட்கு அவையே காரணம் என்று கொள்கின்றனர்.

'குற்றம் நமது நக்ஷத்திரங்களினிடத்து இல்லை, ஆனால் நம்மிடத்தே தான்' என்பார் கவியரசர் ஷேக்ஸ்பியர். நம்மிடத்துள்ள குற்றத்தை ஒழிப்பதால் நாம் நமது விதிகளையே மாற்றக் கூடும்.

இனி அறத்தாற்றைப்பற்றிப்பேசும்போது வேறொரு கட்சியையும் யாம் காண்கின்றோம். அறநெறி சம்பந்தப்பட்டவரை ஒருவன் இன்னவாறு ஒழுகுவான் என்பதைத் தீர்மானிக்க முன்னரே அவனிடம் வாய்ந்துள்ள உடல் நிலையும் மன நிலையும் சூழ்நிலையும் காரணங்களாகின்றன என்பது இவரது கொள்கை. இதன்படி கருமத்தைச் செய்வோன் தன் செயலுக்குப் பொறுப்பாக மாட்டாதவனாவான்.

இக் கொள்கைக்கு மாறாக வேறு பல கொள்கைகளும் உள்ளன; இவற்றின்படி, ஒவ்வொரு மனிதனும் அவனுடைய இறந்தகால நிகழ் கால நிலைமைகட்குச் சம்பந்தமின்றியே இச்சைப்படி எம்மாதிரி நடக்கவும் சுதந்திரம் பெற்றுள்ளான் என்பர்.

முற்கூறிய இரண்டு கோடிகளும் உண்மைகட்கு மாறானவை. மனிதனைக் கட்டுப்படுத்துவன, அவனுக்குப் பிறப்பாலே வந்தவையும் சூழ்நிலையும், அவனுடைய உடல் நிலை மன நிலைகளும், பழக்கங்களும் இயல்புகளும் ஆகும்; இவற்றில் சிலவற்றையேனும் அவன் முற்பிறவியினின்றும் கொண்டு வருகிறான் என்பதும் உண்மையே. எனினும் இவ்வாறான பல வரையறைகட்கு மத்தியிலும் மனிதனுக்கு ஓரளவு சுதந்திரமும் உள்ளது. இந்த சுதந்திரத்தை இயன்ற மட்டில் மிகச் சிறந்த முறையிற் பயன்படுத்துவதனாலே தான் முன்னினும் மிக்க சுதந்திரத்தையும் ஞான ஒளியால் வரும் பேரின்பத்தையும் நம்மாற் பெறலாகும் என்பது பின்னர் விளக்கப்படும்.

(தொடரும்)

செய்தி

ஸ்ரீ சுவாமி விவேகாந்தரது பிறந்தநாள் விழா

திருமயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் ஸ்ரீ சுவாமி விவேகாநந்தரின் 89-வது பிறந்தநாள் விழா இவ்வாண்டு ஜனவரி 30-ம் தேதி செவ்வாய்க்கிழமை காலையில் பஜனை, பூஜை, ஹோமம், பிரசாத விநியோகம் முதலியவற்றோடு இனிதாகக் கொண்டாடப்பட்டது.

பொதுக்கூட்டம் பெப்ரவரி 4-ம் தேதியன்று நடைபெற்றது. மாலை 2 மணிமுதல் 4 மணிவரை திருவிடைமருதூர், ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகள் தம் கூட்டத்தாரோடு 'லலிதா தேவி உபாக்கியானம்' எனும் கதாகாலக்ஷேபஞ் செய்து, அன்பர்களை மகிழ்வித்தனர். பின்னர் உயர்தர நீதிமன்ற நீதியாளர் ஸ்ரீமான் ராகவராவ் அவர்களது தலைமையில் கூட்டம் தொடங்கிற்று. விவேகாநந்தர் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ சுந்தரராம சர்மா அவர்கள் தெலுங்கிலே சுவாமி விவேகாநந்தரின் வாழ்வையும் போதனைகளையும்பற்றிச் சுருங்கக் கூறி, சுவாமிஜி சநாதன தருமத்தின் மேன்மையை மேலை நாட்டினர்க்கு எடுத்துரைத்து, இந்தியாவிற்குரிய மதிப்பினைப் பெருக்கினர் என்று முடித்தார். பின்னர் 'கலைமகளி'ன் ஆசிரியர் ஸ்ரீ ஜகந்நாதன் அவர்கள் சுவாமிகளின் பெருமையை இனிய செந்தமிழில் விளக்கினர். மேலைநாட்டினர்க்கு சுவாமிகள் 'உங்களிடம் ரஜோ குணம் நிறைந்துள்ளது, உங்களிடம் சத்துவம் தலையெடுக்க வேண்டும்' என்றும், நமது நாட்டினர்க்கு 'வாய் வேதாந்தத்தால் உங்கட்கும் பயனில்லை, ரஜோ குணம் வேண்டும்' என்றும் கூறியதன் பொருத்தத்தை இயம்பினர். நாற்றிசையிலும் ஞான நன்னிழல் பரப்பிய சுவாமிகள் ஆகிய பெரிய ஆலமரத்திற்கு வேராய் அமைந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரே என்பதை எடுத்துக்காட்டி முடித்தனர். பின்பு மைசூர்ப் பேராசிரியர் ஸ்ரீ ராகவசாரியார் ஆங்கிலத்திலே ஒரு சொற்பொழிவாற்றினர். "சுவாமிகளின் வாழ்க்கையில் மெய்ப்பொருள் நாட்டம், மெய்யு

ணர்வு, தொண்டு எனும் மூன்று பகுதிகள் அடக்கியிருந்தன; அவர் இந்தியாவிற்குச் செய்த உபதேசமாவது: ஞான அடிப் படையைக் கொண்டே இந்தியா எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய வேண் டும் என்பது; இந்திய நாடு சீர்குலைந்ததற்குக் காரணம் அதற்கு மிகுதியாயிருந்த ஞான ஈடுபாடே என்னும் பேச்சு பொய்ம்மையா னது; துறவு என்னும் இலக்ஷியத்தைப் பின் பற்றுவதால் மனிதன் தனது உண்மையான இயல்பை மீண்டும் பெறுகிறன்; ஆதலின் ஞானவாழ்வே மிக உயர்ந்த பேருகும். சாதன வாழ்க்கையில் நினைவும், செயலும், தன்னயமும், பரநலமும், ஞானம், இச்சை, கிரியை எனும் மூன்று மனித சக்திகளும் ஒன்றோடொன்று முரணுது சமரசத்தோடு அமைய வேண்டும்.'' — இவையே அவரது சொற்பொழிவின் சாரமாகும்.

இறுதியில் தலைவர் அவர்கள் சுவாமிகளின் இணையற்ற பெருமையைப்பற்றியும், பழைய போதனைகளைப் புதிய நிலையினின்று காலத் திற்கு ஏற்பப் புகட்டிய மாண்பையும், அவற் ருல் நமது தற்கால வாழ்வில் ஏற்பட்டுள்ள சங்கடங்களை ஒழிக்கும் வகையையும் நாவன் மையோடும் ஊக்கத்தோடும் எடுத்துரைத் தார். இலெளகிக அறிவையும் மெய்யறிவை யும் ஒருங்கே மாணவர்க்குப் போதிக்க ஒரு வடமொழிப் பல்கலைக் கழகம் ஒன்றை மடம் அமைக்க ஏற்பாடு செய்தல் நலம் என்ற யோசனையையும் புகன்ருர். பின்னர் பேச் சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்க் குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நன்றி யுரையோடு கூட்டம் முடிவுற்றது.

ம தி ப் பு ரை

அறுபத்து மூவர் துதிப்பா

ஆசிரியர்: தணிகைமணி வ. சு. செங்கல்வ ராய பிள்ளை, எம். ஏ. பக்கம் 49. கிடைக்கு மிடம்: 292, லிங்கச் செட்டித் தெரு, சென்னை (ஆசிரியரிடம்).

மெய்யடியார்களாகிய அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரிதக் குறிப்பை 63 வகைப் பாக்களால் குறிப்பிடும் நூல் இது. பாடல்களின் சுருக்கம் வசன நடையிலும் பின் எழுதப்பட்டுள்ளது; அன்றியும் இன்ன பாடல் இன்ன தேவாரப் பண்ணுடன் பாட அமையும் என்பதைக் காட்டும் அனுபந்த மும் சேர்க்கப்பட்டுள்ளது. அடியார் ஒவ் வொருவரது தொண்டின் சிறப்பையும் சுருங் கச் சொல்லி விளங்க வைக்கும் திறனும், ஆற்ருெழுக்காகச் செல்லும் பாவின் நலமும், சொன்னயமும் போற்றத் தகுந்தன. அனைத் திற்கும் மேலாக, 'அடியார்க்கும் அடியேன்' எனத் தொண்டத் தொகை பாடிய வன் ருெண்டரது சரிதையை, ஆராத பக்திச் சுவையும் மிடுக்கும் கூறப் பாடிய பாடல் நூலுக்குத் திருமுடியாக விளங்குகின்றது. இந்நூலை அன்பர் படித்தும் பாராயணம் செய்தும் அடியார் புகழ் எனும் கடலில் ஆழ்ந்து உய்வாராக.

காசியாத்திரை விளக்கம்

ஆசிரியர்: சிதம்பரம், மெளன சுவாமி கள் மடாலயம், ஸ்ரீமத் சபாபதி சுவாமிகள் பக்கம்: 82. விலை: அணு 12. (ஆசிரியர் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ள லாம்).

சென்னையிலிருந்து புறப்பட்டு பம்பாய் மார்க்கமாக அரித்துவாரம் ரிஷிகேசம்வரை சென்று, அயோத்தி, பிரயாகை, காசி, கல் கத்தா வழியாகச் சென்னை வந்து சேரும் விதத்தில், 41 க்ஷேத்திரங்களைப்பற்றிய யாத் திரை விவரங்கள், மூர்த்தி, தலம், தீர்த்தங் களின் சிறப்புகள், காணத்தகுந்த காட்சிகள் இந்நூலிலே அனுபவ ஆராய்ச்சியுடன் விளக் கப்பட்டுள்ளன. யாத்ரீகர்கட்கும் பிறர்க் கும் பயன்படக்கூடிய நூல் இது.